தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கக் கூட்டம்**

சிதம்பரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் செயலர்கள் ஆலோசனைக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

சிதம்பரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத் தலைவர் பா.மில்லர் தலைமை வகித்தார்.

மேலாண்மை இயக்குநர் ராதாகிருஷ்ணன், செயலர் ஜெயபாண்டியன், மேலாளர் எம்.ஜி.ரவிச்சந்திரன், துணைத் தலைவர் பா.வளர்மதி மற்றும் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுக்காக்களைச் சேர்ந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத் தலைவர்கள் 61 பேர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் விதை நெல் விநியோகம், விலையில்லா தரமான அரிசி விநியோகம், 1 கிலோ ரூ.20-க்கு அரிசி வழங்குதல் மற்றும் பொது விநியோகத் திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது.

ஊட்டி டீத்தூள் பாக்கெட்டை சிதம்பரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், இணைப்பு சங்கங்களுக்கு மாதா மாதம் அனுப்பும்போது அதை அந்தந்த மாதத்திலேயே விற்பனை செய்துவிட வேண்டும்.

தமிழக முதல்வரின் நேரடி பார்வையில் இத்திட்டம் நடைபெறுவதால் இதை சிறப்பு இனமாக கருதி ஊட்டி டீத்தூள் பாக்கெட்டை அதிகளவில் விற்பனை செய்ய வேண்டும். தமிழக முதல்வரின் திட்டமான 1 கிலோ ரூ.20-க்கு அரிசி விற்பனை செய்ய விருப்பம் தெரிவிக்கும் கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கு சிதம்பரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வாயிலாக வழங்கக் கேட்டுக் கொள்வது.

அரசு உப்பு வாரியத்தின் மூலம் வழங்கப்படும் அயோடின் கலந்த உப்புகளைப் பெற்று உடனுக்குடன் விற்பனை செய்து அதற்கான தொகையை பிரதான சங்கத்துக்கு உடனே செலுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**19-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

ஜூலை மாதத்துக்கான விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம், வரும் 19-ம் தேதி காலை, ஆட்சியரக கூட்ட அரங்கில் நடைபெறுகிறது. இதில், விவசாயிகள் சங்க பிரதிநிதிகளும், விவசாயிகளும் பங்கேற்கலாம். இதனை ஆட்சியர் வா.சம்பத் தெரிவித்துள்ளார்.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு பூட்டு போட்டு விவசாயிகள் போராட்டம்**

கொள்முதல் பணத்தை பட்டுவாடா செய்யாததால், செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு விவசாயிகள் திங்கள்கிழமை பூட்டு போட்டு போராட்டம்

நடத்தினர்.

இந்த விற்பனைக் கூடத்துக்கு விவசாயிகள் கொண்டு வரும் நெல் மற்றும் மணிலா உள்ளிட்ட பொருட்களுக்கு பணம் பட்டுவாடா செய்வதில் கடந்த ஒரு வருடமாக பிரச்சினை நீடித்து வந்தது. விவசாயிகளுக்கு சுமார் ரூ.3 கோடி வரை சில வியாபாரிகள் பணம் பட்டுவாடா செய்யாமல் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இதனால், விவசாயிகள் அடிக்கடி பல்வேறு போராட்டங்களை நடத்தினர். இந்நிலையில் கடந்த மாதம் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மற்றும் வியாபாரிகள், நிர்வாக கமிட்டியினர் ஆகியோரின் முத்தரப்புக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில், ஜூலை 15-ம் தேதிக்குள் நிலுவையில் உள்ள பணத்தை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, திங்கள்கிழமை பணத்தை பட்டுவாடா செய்யும்படி கமிட்டி நிர்வாகத்திடம் விவசாயிகள் கேட்டனர். இதனை தொடர்ந்து கமிட்டி நிர்வாகிகள் சம்பந்தப்பட்ட வியாபாரிகளை தொடர்புகொள்ள முயன்றபோது அவர்கள் கிடைக்கவில்லை. வருவார்கள் என காத்திருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இதனால் ஆவேசமடைந்த விவசாயிகள், கமிட்டியின் பிரதான வாயில் கதவை இழுத்து பூட்டு போட்டு போராட்டம் நடத்தினர்.

தகவல் அறிந்த செஞ்சி போலீஸார் விவசாயிகளை அப்புறப்படுத்தி காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

**வறட்சி நிவாரணத்தில் அலட்சியம் :அதிமுக கண்டனம்**

கடந்த ஆண்டுக்கான வறட்சி நிவாரணத்தை புதுவை அரசு வழங்காமல் அலட்சியப்படுத்துவது கண்டனத்துக்குரியது என அதிமுக கூறியுள்ளது.

இதுகுறித்து நகர அதிமுக செயலர் ஜி.வி. ஜெயபால் விடுத்துள்ள அறிக்கை: கடந்த ஆண்டு கடைமடை பகுதியான காரைக்காலுக்கு குறித்த நேரத்தில் காவிரி தண்ணீர் வரவில்லை.

இதனால், சுமார் 5,500 ஹெக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்த விவசாயிகள் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டனர். காரைக்காலை சேர்ந்தவர் வேளாண் துறை அமைச்சராக இருந்தும் பயனில்லை. காவிரி தண்ணீர் வராததால் நிகழாண்டுக்கான விவசாயமும் கேள்விக்குறியாகியுள்ளது. எனவே, விவசாயிகளுக்கு அறிவித்த நிவாரணம் மற்றும் ஊக்கத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கக் கோரிக்கை**

விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு வறட்சி நிவாரணத்தொகை வழங்க வேண்டும் என புதுச்சேரி விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் மாநிலக்குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை தலைவர் எம். மாசிலாமணி தலைமையில் வில்லியனூரில் நடைபெற்றது. கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகளை முன்வைத்து ஜூலை 25-ல் கோரிக்கை மாநாடு நடத்துவது, காரைக்கால் போன்று புதுச்சேரியையும் வறட்சி பிரதேசமாக அறிவித்து நிவாரணமாக 10 ஆயிரம் வழங்க வேண்டும், விவசாயிகள்

அனைவருக்கும் வேளாண் அட்டை வழங்க வேண்டும், கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3500 வழங்க வேண்டும், கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனம் வழங்க வேண்டும், பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு உறுப்பினர் நாரா.கலைநாதன், கெப்ரவத் தலைவர் முருகேசன், செயலாளர்கள் இராமச்சந்திரன், பெருமாள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**4 விவசாயக் குழுக்களுக்கு மானியத்தில் வேளாண் கருவிகள்**

சிவகங்கை வேளாண் பொறியியல் துறை சார்பில் அமைக்கப்பட்ட 4 விவசாய துணை குழுக்களுக்கு அரசு முழு மானியத்துடன் ரூ.11,72,980 மதிப்பிலான வேளாண் கருவிகளை தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு வாரியத் தலைவர் பி.ஆர். செந்தில்நாதன் வழங்கினார்.

இளையான்குடி ஒன்றியம் குமாரக்குறிச்சி துணைக் குழுத் தலைவர் அ. குலசேகரன், காளையார்கோவில் ஒன்றியம் வீளனேரி துணைக் குழு துணைத் தலைவர் த. ராமசாமி, திருப்புவனம் ஒன்றியம் பிரமனூர் துணைக் குழு செயலர் க. சபரிராஜன், சிவகங்கை மற்றும் மானாமதுரை ஒன்றியம் தமறாக்கி துணைக் குழுப் பொருளாளர் பா. கருணாகரன் ஆகிய 4 குழுக்களுக்கு அரசு முழு மானியத்துடன் கூடிய தலா ரூ.1,02,795 மதிப்பிலான பவர் டில்லர் (கிரீவ்ஸ் காட்டன்), தலா ரூ.1,66,000 மதிப்பிலான யாஞ்சி சக்தி நெல் நாற்று நடவு இயந்திரம், தலா ரூ.24,450 மதிப்பிலான களை எடுக்கும் இயந்திரம் ஆகியவற்றை தேசிய வேளாண் வளர்ச்சித் திட்ட வேளாண் கருவிகள் சேவைக் குழுக்களுக்கு தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக வாரியத் தலைவர் வழங்கினார்.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் தலைமை வகித்தார். மாவட்ட ஊராட்சித் தலைவர் கே.எஸ். சிவதேவ்குமார், சிவகங்கை ஒன்றியக் குழுத் தலைவர் பாஸ்கரன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ராஜகோபால், உதவி செயற் பொறியாளர் ஹென்றி, உதவி பொறியாளர் நவசக்தி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**ஜூலை 19 விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜூலை 19 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

இதில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது குறைகளைத் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம் என ஆட்சியர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**புழு வளர்ப்பு மனை கட்டுவதற்கு மானியம்**

பட்டு வளர்ச்சித் துறை மூலம் தனி புழு வளர்ப்பு மனை கட்டுவதற்கு மானியத்தை பயனாளிக்கு மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் வழங்கினார்.

சிவகங்கையை தலைமையிடமாகக் கொண்டு பட்டுத் தொழில் நுட்ப சேவை மையம் செயல்பட்டு வருகிறது. சிவகங்கை, காளையார்கோவில் ஆகிய பகுதிகளில் பட்டு வளர்ப்பு விரிவாக்கப் பணியை இளநிலை ஆய்வாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

ஓ. புதூர் மற்றும் குன்றக்குடியில் அரசு பட்டுப் பண்ணை செயல்பட்டு வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மல்பரி நாற்றுகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

பட்டு முட்டையில் இருந்து 8 நாள் வரை இளம் புழுக்களை வளர்த்தும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக் கூடுகள் சிவகங்கை அரசு பட்டுக் கூடு அங்காடியில் கொள்முதல் செய்யப்படுகிறது.

2012-13 ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சித் துறை கிரியா ஊக்கித் திட்டத்தின் கீழ் தனி புழு வளர்ப்பு மனை 1,500 சதுர அடி பரப்புக்கு மேல் கட்டிய வகையில் காளையார்கோவில் ஒன்றியம் கல்குளம் கிராமத்தைச் சேர்ந்த பட்டு விவசாயி எம். நாகராஜனுக்கு மத்திய, மாநில அரசுகளின் மானியத் தொகை ரூ.1 லட்சத்திற்கான காசோலையை ஆட்சியர் ராஜாராமன் திங்கள்கிழமை வழங்கினார்.

அப்போது பட்டு வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் எல். நடராஜன், சமயநல்லூர் மண்டல விரிவாக்க மைய விஞ்ஞானி ஏ. ஞானகுமார் டேனியல், இளநிலை ஆய்வாளர்கள் எஸ். பாஸ்கரன், எம். திருப்பதி ஆகியோர் உடனிருந்தனர்.

**மாடித் தோட்டம் அமைக்கப் பயிற்சி**

பரமக்குடி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் மாடித் தோட்டம் அமைப்பது குறித்த பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குநர் பா. இளங்கோவன் தலைமை வகித்தார். நகர்மன்றத் தலைவர் கீர்த்திகா முனியசாமி முன்னிலை வகித்தார். தோட்டக்கலை உதவி இயக்குநர் ஜெ. சேகர் வரவேற்றார்.

மாடித்தோட்டம் அமைப்பது, அதன் பயன்கள் குறித்து பேராசிரியர் சக்திவேல், ரஞ்சிதம் ஆகியோர் கூறியது:

மாடித் தோட்டம் மூலம் நமக்கு நாமே காய்கறிகள் மற்றும் மலர்கள் வளர்க்கலாம். இதற்கு வீட்டின் மொட்டை மாடி இடம் போதுமானது.

மாடித் தோட்டத்தில் சின்னத் தொட்டிகள், மண்பாண்டங்கள், குடங்களின் அடிப்பாகம், பிளாஸ்டிக் தட்டுகள் ஆகியவற்றில் மண் நிரப்பி அதில் நமக்குத் தேவையான கத்தரி, வெண்டை, தக்காளி, மிளகாய், தண்டங்கீரை, புதினா, கறிவேப்பிலை, பொரியல், தட்டை, அரைக்கீரை,

சிறுகீரை, பொன்னாங்கன்னி, முளைக்கீரை, புடலை, பாகல், பீர்க்கன் போன்ற காய்கறிகளையும், செண்டு மல்லி, செம்பருத்தி, ரோஜா, கனகாம்பரம் போன்ற மலர்களையும் வளர்க்கலாம்.

இதனால் சத்தான சுவைமிக்க நஞ்சில்லாத இயற்கை முறையில் அன்றே விளைந்த காய்கறிகளை தினமும் பெறமுடியும்.

நகர்ப்புறங்களில் வீட்டின் மொட்டை மாடிகளில் மாடித் தோட்டம் அமைப்பதற்கு தோட்டக்கலைத் துறையினர் தேவையான விதை மற்றும் தொழில்நுட்ப உதவிகள் செய்து வருகின்றனர். மேலும் விவரங்களுக்கு 9443013999, 9443961971 என்ற எண்களை தொடர்பு கொள்ளலாம். தோட்டக்கலை அலுவலர் மு. சந்தியா நன்றி கூறினார்.

**பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 64.17 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரபடி 64.17 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 2,913 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 900 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 8.69 டி.எம்.சி.

**மானிய விலையில் விதைகள் விநியோகம் தொடக்கம்**

துவரை அதிவிரைவு பயறு பெருக்குத் திட்டத்தின்கீழ் குடியாத்தம் வட்டாரத்தில் 500 விவசாயிகளுக்கு மானிய விலையில் துவரை விதை, இடுபொருள்கள் விநியோகம் திங்கள்கிழமை துவங்கப்பட்டது.

குடியாத்தம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, வேளாண்மை உதவி இயக்குநர் சி. பூங்கோதை தலைமை வகித்தார். விவசாயிகளுக்கு துவரை விதைகள், இடுபொருள்களை ஒன்றியக் குழு உறுப்பினர் கே. ரமேஷ் வழங்கினார்.

வேளாண்மை அலுவலர் த. ராஜேந்திரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் வா. ஜெயக்குமார், தா. வெங்கடேசன், கிடங்கு மேலாளர் என். ராஜா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதுகுறித்து வேளாண்மை உதவி இயக்குநர் சி. பூங்கோதை கூறியது:

குடியாத்தம் வட்டாரத்தில் 500 ஹெக்டேர் பரப்பில் துவரை பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக 500 விவசாயிகளுக்கு தலா 10 கிலோ துவரைவிதை, உரம், பூச்சி மருந்துகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது என்றார்.

**19-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 19-ம் தேதி காலை 10.30 மணிக்கு நடைபெறுகிறது.

கூட்டத்துக்கு ஆட்சியர் பொ.சங்கர் தலைமை தாங்குகிறார். வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வருவாய்த் துறை, கூட்டுறவுத் துறை உள்ளிட்டவற்றின் அதிகாரிகள் பங்கேற்று விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளிப்பர்.வேலூர், ஜூலை 15: மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 19-ம் தேதி காலை 10.30 மணிக்கு நடைபெறுகிறது.

கூட்டத்துக்கு ஆட்சியர் பொ.சங்கர் தலைமை தாங்குகிறார். வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வருவாய்த் துறை, கூட்டுறவுத் துறை உள்ளிட்டவற்றின் அதிகாரிகள் பங்கேற்று விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளிப்பர்.

**ஜூலை 19-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

கரூர் மாவட்டத்தில் ஜூலை மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் குளித்தலையில் ஜூலை 19-ம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

குளித்தலை கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் கரூர் மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயம் தொடர்பான பிரச்னைகளைக் கூறலாம். விவசாயம் தொடர்பான மனுக்கள் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 69.52 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 69.52 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 18,267 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 3,002 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்**

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டாட்சியர் அலுவலகம் முன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கைகளை வலியுறுத்தி திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

திருவையாறு வட்டத்துக்கு உள்பட்ட கடுவெளி கிராமத்தைச் சேர்ந்த 90 விவசாயிகள் குடும்பத்தினர் சுமார் 110 ஏக்கர் நிலத்தை சாகுபடி செய்து வருகின்றனர். நூறு ஆண்டுகளுக்கு முன்பு தரிசாகக் கிடந்த பூமியை இவர்களது முன்னோர்கள் விளைநிலமாக மாற்றி கரும்பு, வாழை, வெற்றிலை, காய்கறிகள் ஆகியவற்றை பயிர் செய்து தங்களது குடும்பங்களைப் பாதுகாத்து வருகின்றனர்.

அரசு உத்தரவுப்படி இவர்களுக்கு பட்டா வழங்குவதற்குப் பதிலாக எந்தவித முன்னறிவிப்பும் இன்றி மாவட்ட நிர்வாகமே இவர்களை வெளியேற்ற முயற்சித்து வருகிறது. கடுவெளி கிராம விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும். உரிமை பெறும் வகையில்

அவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

**அண்ணாபேட்டையில் கால்நடை மருந்தகம் அமைக்க வலியுறுத்தல்**

வேதாரண்யத்தை அடுத்த அண்ணாபேட்டை கிராமத்தில் கால்நடை மருந்தக கிளை நிலையம் அமைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து அண்ணாப்பேட்டை ஊராட்சித் தலைவர் சோ. ரவிச்சந்திரன், தமிழக சட்டப்பேரவை மனுக்கள் குழுவுக்கு அனுப்பியுள்ள மனு விபரம்:

அண்ணாபேட்டை மற்றும் வண்டுவாஞ்சேரி பகுதியில் கால்நடை வளர்ப்பு முதன்மைத் தொழிலாக உள்ளது. ஆனால், இப்பகுதி மக்கள் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க சுமார் 6 கி.மீ. தொலைவில் உள்ள வாய்மேடுக்கு செல்ல வேண்டியுள்ளது. எனவே, அண்ணாபேட்டையை மையமாகக் கொண்டு கால்நடை மருந்தக கிளை நிலையம் அமைக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

**56 கிராமங்களில் கால்நடை மருத்துவ முகாம்'**

பெரம்பலூர் மாவட்டத்தில் 2013- 14-ம் ஆண்டுக்கு 56 கிராமங்களில் கால்நடை பாதுகாப்புத் திட்ட மருத்துவ முகாம் நடைபெற உள்ளது என்றார் பெரம்பலூர் தொகுதி எம்எல்ஏ இரா. தமிழ்ச்செல்வன்.

பெரம்பலூர் அருகேயுள்ள கல்பாடி கிராமத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மருத்துவ முகாமைத் தொடக்கி வைத்து, விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தில் 113 பேருக்கு ரூ. 14 லட்சத்து 69 ஆயிரத்தில் 452 ஆடுகள், வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு தீவன சோள விதை, சிறந்த முறையில் கன்றுகளைப் பராமரித்த 8 பேருக்குப் பரிசுகளை வழங்கிய அவர் மேலும் தெரிவித்தது:

கால்நடை மருந்தகங்கள், கிளை நிலையங்கள் இல்லாத கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களுக்குச் சிகிச்சையளிக்க கால்நடைப் பராமரிப்புத் துறை சார்ந்த உதவி மருத்துவர்கள் அடங்கிய குழுக்கள் மூலம் சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 2013-14-ம் ஆண்டு பெரம்பலூர் மாவட்டத்தில் 56 முகாம்கள் நடத்த இலக்கு நிரணயிக்கப்பட்டு கல்பாடி, அருமடல், வெள்ளனூர், குரும்பலூர் புதூர், அனுக்கூர், மேல்வாடி, நூத்தப்பூர், உடும்பியம் ஆகிய கிராமங்களில் மருத்துவ முகாம் நடைபெற உள்ளது.

முகாமில் கால்நடைகளுக்கு குடற்புழு மற்றும் மலட்டுத் தன்மை நீக்கச் சிகிச்சை, சுண்டுவாத அறுவைச் சிகிச்சை, தடுப்பூசி உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்படும் என்றார் அவர்.

பெரம்பலூர் கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் க. தங்கராசு தலைமையிலான மருத்துவக் குழுவினர் 53 கால்நடைகளுக்கு பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை, 640 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், 30 பசுக்களுக்கு செயற்கை முறை கருவூட்டல், 289 பசுக்களுக்கு அடைப்பான் நோய் தடுப்பூசி, 15 ஆடுகளுக்கு ஆண்மை நீக்கம் என 1,027 கால்நடைகளுக்குச் சிகிச்சையளித்தனர்.

நிகழ்ச்சியில் ஒன்றியக் குழு உறுப்பினர் ஜெயக்குமார், கல்பாடி ஊராட்சி துணைத் தலைவர் வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். ô ல்நடைப் பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குநர் எம். சந்திரசேகரன் வரவேற்றார். ஊராட்சித் தலைவர் ராஜாமணி நன்றி கூறினார்.

**"விவசாய தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்'**

வறட்சியால் வேலையிழந்து வறுமையில் வாடும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணைச் செயலர் கோ. பழனிச்சாமி.

இதுகுறித்த அவரது அறிக்கை: சென்னை தவிர்த்த 31 மாவட்டங்களையும் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்து, காவிரி பாசன மாவட்டங்களில் 50 சதத்துக்கு மேல் பயிர்களை இழந்த 1.75 லட்சம் விவசாயிகளின் 3.61 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு ஏக்கருக்கு தலா ரூ.15 ஆயிரம் நிவாரணம் உள்ளிட்ட நிவாரணத் திட்டங்கள் வரவேற்கக் கூடியது.

தொடர்ந்து நிகழாண்டும் மேட்டூர் அணை திறக்கப்படாமல், குறுவை சாகுபடியும் தொடங்கப்படாத நிலையில் வறட்சியால் வேலைவாய்ப்பின்றி வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்க தமிழக முதல்வர் அறிவிப்பை வெளியிட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுÓள்ளார்.

**வறட்சி நிவாரணத்தில் அலட்சியம்**

வறட்சி நிவாரணத்தை புதுவை அரசு வழங்காமல் அலட்சியப்படுத்துவது கண்டனத்துக்குரியது என அதிமுக கூறியுள்ளது.

இதுகுறித்து நகர அதிமுக செயலர் ஜி.வி. ஜெயபால் விடுத்துள்ள அறிக்கை: கடந்த ஆண்டு கடைமடை பகுதியான காரைக்காலுக்கு குறித்த நேரத்தில் காவிரி தண்ணீர் வரவில்லை. இதனால், சுமார் 5,500 ஹெக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்த விவசாயிகள் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டனர். அண்டை மாநிலமான தமிழகத்தில், விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுவிட்டது. ஆனால், காரைக்கால் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் இதுவரை தரப்படவில்லை.

புதுச்சேரி அரசு விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் விதை நெல், உரம், பூச்சி மருந்தை காலத்தோடு தராததால், விளை நிலங்கள் ரியல் எஸ்டேட்டுகளாக மாறி வருகின்றன. காவிரி தண்ணீர் வராததால் நிகழாண்டுக்கான விவசாயமும் கேள்விக்குறியாகியுள்ளது. எனவே, விவசாயிகளுக்கு அறிவித்த நிவாரணம் மற்றும் ஊக்கத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

**தூத்துக்குடியில் 18-ல் விவசாயிகள் குறை தீர் கூட்டம்**

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் வியாழக்கிழமை (ஜூலை 18) நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ்குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் குறைகளைத் கேட்டறியும் வகையில் மாதம்தோறும் மூன்றாவது வியாழக்கிழமை விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, ஜூலை மாதத்துக்கான குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறுகிறது. ஆட்சியர் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் விவசாய சங்கத் தலைவர்களும், பாசன சங்கப் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இயற்கை விவசாயத்தில் ஆர்வம் ஊக்குவித்தால் விளைச்சல் மேம்படும்**

கோத்தகிரி:கோத்தகிரி பகுதி விவசாயிகள் இயற்கை உரங்களை பயன்படுத்துவதில், ஆர்வம் காட்டி வரும் நிலையில், அரசு ஊக்குவிக்க வேண்டியது அவசியம். நீலகிரி மாவட்டத்தில் பசுந்தேயிலைக்கு அடுத்தப்படியாக, நீர் ஆதாரமுள்ள சமமான நிலங்களில் மலைக்காய்கறி சாகுபடி செய்யப்படுகிறது. கோத்தகிரி வட்டாரத்தில், மிளிதேன், நெடுகுளா, வ.உ.சி., நகர், சுள்ளிக்கூடு, கட்டபெட்டு மற்றும் கூக்கல்தொரை உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ரசாயன உரங்களின் விலையேற்றம் மற்றும் தட்டுப்பாடு போன்ற காரணங்களால், விவசாயிகள் இவ்வகை உரங்களை சமீபக்காலமாக படிப்படியாக தவிர்த்து, இயற்கை உரங்களை கூடுமானவரை பயன்படுத்தி வருகின்றனர். "இயற்கை உரங்களை பயன்படுத்துவதால், மண்ணில் நுண்ணுயிரிகள் உயிர்ப்பித்து, பயிர் வளர்ச்சி பெருகுவதுடன், மண்ணின் தன்மை பாதுகாக்கப்படும்; மேலும், நிலத்தில் ஈரத்தன்மை குறையாமல், மகசூலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. தவிர, இயற்கை உரத்தால் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறிகளுக்கு, சந்தையில் கூடுதல் விலை கிடைப்பதுடன், சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படும்' என, இயற்கை வேளாண் ஆய்வாளர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். இதனால், விவசாயிகள் மத்தியில் இயற்கை விவசாயத்தின் ஆர்வம் அதிகரித்து வருகிறது.

இதனால், இயற்கை விவசாயத்துக்கு தேவையான நடவடிக்கைகளை தோட்டக்கலை துறை அதிகரிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், பொது இடங்களில் அன்றாட சேகரமாகும் குப்பைகளை தரம் பிரித்து, மறு சுழற்சி மூலம் உரம் தயாரிக்க, பயிற்சி அளிக்க வேண்டும்.

**வறண்டு கிடக்கும் மணிமுக்தா அணைஆயக்கட்டு பாசன விவசாயிகள் கவலை**

தியாகதுருகம்:பருவமழை ஏமாற்றி வருவதால் விழுப்புரம் மாவட்டத்தின் பெரிய நீர்த் தேக்கமான மணிமுக்தா அணையில் தண்ணீர் இல்லாமல் முற்றிலும் வறண்டு மைதானம் போல் காட்சியளிக்கிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் கோமுகி, வீடூர், மணிமுக்தா அணைகள் உள்ளன. பெரிய நீர்தேக்கமாக மணிமுக்தா அணை உள்ளது. கல்வராயன்மலையில் உற்பத்தியாகும் மணி, முக்தா ஆகிய இரு ஆறுகள் இணையும் இடமான சூளாங்குறிச்சி அருகே மணிமுக்தா அணை கட்டப்பட்டுள்ளது.4500 ஏக்கர்இதன் மூலம் 4,500 ஏக்கர் ஆயக்கட்டு நிலம் பாசன வசதி பெறுகிறது. ஆற்றில் உள்ள தடுப்பணைகளை ஆதாரமாக கொண்டு நீர் வரத்து கிடைக்கும் ஏரி பாசனம் மூலம் 5,000 ஏக்கர் நிலம் மறைமுக பாசனம் பெறுகின்றன. அணையின் நீர்ப்பிடிப்பு பகுதி 7.45 சதுர கி.மீ., பரப்பில் பரந்துவிரிந்துள்ளது. அணை நிரம்பும்போது 736.96 மில்லியன் கன அடி நீரை தேக்கி வைக்க முடியும். மீன் வளர்ப்பு மூலம் அரசுக்கு உபரி வருவாய் கிடைத்து, பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது.அகரக்கோட்டாலம் அருகே உள்ள பிரதான கால்வாய் மூலம் 12.5 கிமீ., தூரத்திற்கு பாசன நீர் கொண்டு செல்லப்படுகிறது. இதன் மூலம் 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. அணை நிரம்பினால் இரண்டு போகம் நெல் சாகுபடி சாத்தியம்.மழை ஏமாற்றம்கடந்த ஆண்டு பருவமழை ஏமாற்றியதால் மணிமுக்தா அணை நிரம்பாமல், ஆயக்கட்டு பாசன விவசாயிகள் பாதித்தனர். கடைசியாக தானே புயல் மழையால் அணை நிரம்பியது. கடந்த ஆண்டு போதிய மழையின்றி அணை வறண்டு மீன்பிடி தொழிலும் பாதித்தது. தென்மேற்கு பருவ மழை துவங்கி ஒன்றரை மாதம் ஆகியும் எதிர்பார்த்த மழை பெய்யவில்லை. கல்வராயன் மலையில் மழை பெய்தால் கூட அணைக்கு ஓரளவு தண்ணீர் கிடைக்கும். தூரலுடன் மழை மேகங்கள் கலைந்து விடுவதால் தண்ணீர் இல்லாமல் அணை காய்ந்து மைதானமாக உள்ளது. இவ்வாண்டும் அணை நிரம்புமா என்ற சந்தேகம் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. அணையை நம்பி ஆயக்கட்டு பாசன நிலங்களில் நெல் சாகுபடி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

**வறட்சியின் தாண்டவம் விளையாட்டு மைதானமாக மாறி வரும் ஏரிகள்**

காஞ்சிபுரம்:பருவ மழை பொய்த்ததன் காரணமாகவும், நீர் வரத்து கால்வாய்கள் தூர்ந்து போனதாலும்,

ஏரிகள் வறண்டு, விளையாட்டு மைதானமாக சிறுவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆக்கிரமிப்பு

காஞ்சிபுரம் மாவட்டத்தில், 912 ஏரிகளும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 93 ஏரிகளும், திருவள்ளூர் மாவட்டத்தில் 4 ஏரிகள் உட்பட 1009 ஏரிகள் காஞ்சிபுரம் பொதுப் பணி துறை கோட்டத்தின் கீழ் பராமரிக்கப்படுகின்றன. இந்த ஏரியை நம்பி விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர். மாவட்டம் முழுவதும், பெரும்பாலான ஏரிகள் ஆழம் குறைந்து காணப்படுகின்றன.

அதே நேரத்தில், ஏரிகளுக்கு வரும் நீர் வரத்துக் கால்வாய் பல்வேறு இடங்களில் ஆக்கிரமிப்பாளர்கள் பிடியில் சிக்கி உள்ளது. இவற்றில், பிரதான ஏரிகளில், நீர் வரத்துக்

கால்வாயில் தண்ணீர் வரத்து குறைந்து ஏரிகளில் தண்ணீர் சேமிப்பது சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஆகையால், பருவ மழைக்காலங்களிலும் ஏரிகள் நிரம்புவது கேள்விக்குறியாகியுள்ளது. ஏமாற்றம் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, கிராமத்தில் உள்ள இளைஞர்கள் பிரதான ஏரிகளில் கிரிக்கெட் விளையாடுவதற்கு, ஆடுகளாமாக பயன்படுத்தி வருகின்றனர். பருவ மழைக் காலம் துவங்கியும் ஏரிகளில் தண்ணீரின்றி கட்டாந்தரையாக காட்சியளிப்பது, விவசாயிகளிடையே ஏமாற்றத்தை அளிக்கிறது.

**பசுந்தீவனத்துடன் அசோலா தாவரம்: பால் உற்பத்தி அமோகம்**

செய்யூர்:பசு மாடுகளுக்கு அசோலா தாவரத்தை தீவனமாக கொடுப்பதன் மூலம் கூடுதல் பால் உற்பத்தி கிடைப்பதாக காவனூர் விவசாயி தெரிவித்தார். சித்தாமூர் ஒன்றியத்தில் உள்ளது காவனூர் கிராமம். இங்குள்ள மக்களின் முக்கிய தொழில் விவசாயமாகும். விவசாயத்திற்கு தேவையான இயற்கை உரமான எரு கிடைக்கவும், பால் விற்பனை செய்யவும் மக்கள் பசுக்களை வளர்க்கின்றனர்.

கொழுப்பு சத்து

பசுக்களுக்கு புண்ணாக்கு, மற்றும் தவிடு, பொட்டு ஆகியவற்றை வைக்கின்றனர். பசுக்களுக்கு வைக்கப்படும் புண்ணாக்கு அதிக விலைக்கு விற்பதால் புண்ணாக்கிற்கு பதிலாக கொழுப்பு சத்து மிகுந்த அசோலா தாவரத்தை தவிட்டுடன் கலந்து கொடுக்கின்றனர். இதனால் பாலில் கொழுப்பு சத்து கூடுவதுடன் கூடுதல் விலை கிடைப்பதாக விவசாயி வரதப்பிள்ளை தெரிவித்தார். இது குறித்து, வரதப்பிள்ளை கூறியதாவது:

விவசாயத்திற்கு அடுத்த படியாக மிகுந்த அளவில் எங்கள் கிராமத்தில் பசுக்களை வளர்த்து வருகிறோம். இங்கு கிடைக்கும் பாலை தனியார் நிறுவனத்திற்கு கொடுக்கிறோம். பாலில் உள்ள கொழுப்பு சத்திற்கு ஏற்றாற்போல் பாலுக்கு விலை கொடுக்கிறார்கள். எங்களிடம் கிடைக்கும் பாலில் கொழுப்பு சத்து குறைந்து காணப்பட்டது. இதனால், விலை குறைவாக மதிப்பிடப்பட்டது.

பயிற்சி

இதுகுறித்து, எங்கள் உழவர் மன்றத்தின் சார்பில் இல்லீடு தேசிய வேளாண் நிறுவனத்தில் தெரிவித்தோம். அதையடுத்து அசோலா உற்பத்தி செய்யவும், அதனால் ஏற்படும் பலன்கள் குறித்தும் எங்களுக்கு பயிற்சி அளித்தனர். அதன்படி எங்கள் கிராமத்தில் 10 க்கும் மேற்பட்ட நபர்கள் அசோலா தாவரம் பயிர் செய்கிறோம்.

இதற்காக 10 அடி நீளம் 2 அடி அகலத்தில் ஒரு தொட்டி கட்டி, அதன் அடித்தளத்தில் பாலிதீன் காகிதம் போடவேண்டும். காகிதத்தின் மேல் 30 கிலோ மண் பரப்ப வேண்டும். அதன் மேல் 2 கிலோ சாணம், 10 கிராம் டி. ஏ.பி, 100 கிராம் ‹ப்பர் பாஸ்பேட் கலந்து இரண்டு அடி தண்ணீர் விடவேண்டும்.

இதன் மேல் ஒரு கிலோ அசோலா தாவரத்தை இடவேண்டும். காலை மற்றும் மாலை வேளைகளில் மண்ணை நன்றாக கலக்கவேண்டும்.

ஒரு வாரத்தில் அசோலா தாவரம் 3 மடங்கு வரும். அப்போது இரண்டு பங்கை மட்டும் எடுத்து நல்ல நீரில் கழுவி மாடுகளுக்கு தவிட்டில் கலந்து வைத்து வருகிறோம். இதன் மூலம் எங்களுக்கு நல்ல பலன் கிடைத்தது. அசோலா தீவனம் வைத்த 10 நாட்களில் கொழுப்பு சத்து கூடுதலாகியது.

கூடுதல் விலை

இதற்கு முன் எங்களுக்கு 1 லிட்டர் பாலுக்கு 17 ரூபாய் கொடுத்தனர். தற்போது 20 ரூபாய் கொடுக்கின்றனர். மேலும் காலை மற்றும் மாலை நேரங்களில் பால்கறக்கிறோம். அப்போது ஏற்கெனவே கிடைத்ததை விட கூடுதலாக அரை லிட்டர் கிடைக்கிறது. பசுக்களும் இத்தாவரத்தை விரும்பி சாப்பிடுகின்றன. மாடுகளும் ஆரோக்கியமாக உள்ளன.

வீட்டில் உள்ள தொட்டிகளிலேயே இதை பயிர் செய்வதால் செலவு ஏதும் இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இது குறித்து இல்லீடு தேசிய வேளாண் நிறுவனத்தின் பூச்சியியல் நிபுணர் வேல்முருகன் கூறியதாவது: அசோலா தாவரம் தண்ணீரில் மிதக்கக்கூடிய தாவரமாகும்.இது வேகமாக வளரும் தன்மை கொண்டது. ஒரு கிலோ விதையை தண்ணீரில் இடுவதன் மூலம் , நன்றாக பராமரித்து வந்தால் ஒரு ஆண்டுவரை இத்தாவரம் வளர்ந்து, பயன் அளிக்கும்.

சாதாரணமாக இங்கு 3.5 முதல் 4 சதம் மட்டுமே கொழுப்பு சத்து கிடைக்கும். அசோலாவை பயன்படுத்தி வந்தால் 4.5 முதல் 4.09 சதவீதம் வரை கொழுப்பு சத்து கூடும். இதன் மூலம் விவசாயிகள் பலனடையலாம். இவர்களுக்கு இத்தாவர விதையை நாங்கள் இலவசமாக வழங்கி பயிற்சி அளித்தோம்.

இவ்வாறு வேல்முருகன் தெரிவித்தார்.

**பருத்தி ஏலம்**

ராசிபுரம்: ராசிபுரம் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம் சார்பில், அக்கரைப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கி வளாகத்தில், பருத்தி ஏலம் நடந்தது. ஏலத்தில், 40 கிலோ எடை கொண்ட, 520 பருத்தி மூட்டைகள் கலந்து கொண்டன. ஏலத்தில், சுரபி ரகம், அதிகபட்சம், 7,272 ரூபாய்க்கும், குறைந்தபட்சம், 6,890 ரூபாய்க்கும் விற்பனையானது.மொத்தம், 15 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**தமிழகம், கேரளாவில் முட்டைவிலை 340 காசுகளாக நிர்ணயம்**

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 340 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை, இரு தினங்களில், 20 காசுகள் ஏற்றம் கண்டிருப்பது, கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 325 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 15 காசுகள் ஏற்றம் கண்டு, 340 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.முட்டை விலை, நேற்று ஒரே நாளில், 15 காசுகள் ஏற்றம் கண்டுள்ளது. அதேபோல், இரு தினங்களில், 20 காசுகள் ஏற்றம் கண்டிருப்பது, பண்ணையாளர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 327 பெங்களூரு, 330, மைசூரு, 325, ஹைதராபாத், 304, மும்பை, 336, விஜயவாடா, 299, கோல்கத்தா, 350, பர்வாலா, 325, டில்லி, 335.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 58 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, கிலோ, 78 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**நீரேற்று பாசன பம்ப் செட்டுகளுக்கு "சீல்'**

நாமக்கல்: குடிநீருக்காக திறக்கப்படும் தண்ணீரை, நீரேற்று பாசன சங்கங்கள் பம்ப் செட் மூலம் தொடர்ந்து உறிஞ்சி வருகின்றனர். அதனால், திருச்சி மாவட்டம் வாத்தலை கீழ் அணையை தண்ணீர் தாண்டவில்லை. பொதுப்பணித்துறையினர் அதிரடி நடவடிக்கை எடுத்து, பத்துக்கும் மேற்பட்ட பம்ப் செட்களுக்கு, "சீல்' வைத்தனர்.
தமிழகத்தில், பருவமழை பொய்த்துப்போனதால், மேட்டூர் அணை நீர்மட்டம் குறைந்து, தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. அதனால், டெல்டா மாவட்டங்களில் சாகுபடி மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.இந்நிலையில், தற்போது, கர்நாடகாவில் மழை பொழிந்து, அங்குள்ள அணைகள் வேகமாக நிரம்பி வருவதால், உபரி நீர், காவிரியில் வெளியேற்றப்படுகிறது. அதை தொடர்ந்து, மேட்டூர் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து, தற்போது, 67 அடியை எட்டியுள்ளது.
குடிநீர் தேவைக்காக, 1,000 கனஅடி நீர் மட்டுமே திறக்கப்பட்ட தண்ணீர், கடந்த ஒரு வாரமாக, 3,000 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. அந்த தண்ணீர், குடிநீர் பயன்பாட்டுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என, அரசு உத்தரவிட்டுள்ளது.ஆனால், அந்த தண்ணீரை,

பாசனத்துக்காக ஊறிஞ்சி எடுப்பதால், குடிநீருக்காக திறந்துவிடப்பட்ட தண்ணீர், திருச்சி மாவட்டம் வாத்தலை கீழ் அணையை தாண்டவில்லை.ஈரோடு மாவட்டம் துவங்கி, திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூர் வரை இடைப்பட்ட தூரத்தில், காவிரி ஆற்றின் இரு பகுதிகளிலும், 15 ஆயிரம் ஹெச்.பி., குதிரை திறன் கொண்ட பம்ப் செட்டுகள் இயங்கி வருகின்றன. அவை, தொடர்ந்து பாசனத்துக்காக தண்ணீரை உறிஞ்சி வருகின்றன.அதனால், தண்ணீர் வாத்தலை கீழ் அணையை தாண்டவில்லை. இது குறித்து, பொதுப்பணித்துறை சரபங்கா கோட்ட அதிகாரிகள், கடும் எச்சரிக்கை விடுத்தும், நீரேற்று பாசன சங்கங்கள் கண்டுகொள்ளவில்லை. தொடர்ந்து, நீர் உறிஞ்சி, பாசனத்துக்காக பயன்படுத்தி வருகின்றனர்.இந்நிலையில், காவிரி ஆற்றில் குடிநீர் தேவைக்காக திறந்துவிடப்படும் தண்ணீரை உறிஞ்சி வந்த பாசன பம்ப் செட்டுகளை, பொதுப்பணித்துறையினர் அதிரடியாக ஆய்வு செய்து, அவற்றை சீல் வைக்கும் நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளனர்.சில நாட்களாக, பத்துக்கும் மேற்பட்ட பம்ப் செட்டுகளுக்கு, "சீல்' வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஒருபோக சாகுபடிக்கு தேவையான தண்ணீரை உறுதி செய்த பின்னரே, மேட்டூர் அணையில் இருந்து, பாசனத்துக்காக தண்ணீர் திறக்க வாய்ப்பு உள்ளதாக, பொதுப்பணித்துறை வட்டாரத்தில் தெரிவிக்கப்படுகிறது.

**கெலவரப்பள்ளி அணையில் பாசனத்துக்கு நீர் திறப்பு:விவசாயிகள் மகிழ்ச்சி**

ஓசூர்: ஓசூர் கெலவரப்பள்ளி அணை நீர் பாசனத்துக்கு திறக்கப்பட்டது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.ஓசூர் அருகே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கெலவரப்பள்ளி அணை உள்ளது. இந்த அணைக்கு கர்நாடகா மாநிலம், நந்திஹில்ஸ் மலை நீர் பிடிப்பு பகுதியில் இருந்து தண்ணீர் வருகிறது.இந்த அணையில் இருந்து நீர் ஆதாரத்துக்கு தகுந்தவாறு, கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணைக்கு உபரி நீர் திறந்து விடப்படும். கெலவரப்பள்ளி அணையின் மொத்த நீர் மட்டம், 44 அடியாகும்.நடப்பாண்டு, கர்நாடகாவில் பெய்த மழையால், கெலவரப்பள்ளி அணை நிரம்பியது. அதனால், அணையில் இருந்து கே.ஆர்.பி., அணைக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால், கெலவரப்பள்ளி அணையின் நீர் மட்டம் தற்போது, 38 அடியாக உள்ளது.நேற்று காலை கெலவரப்பள்ளி அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் வலது மற்றும் இடது புற கால்வாய்களில் இருந்து கலெக்டர் ராஜேஷ், மலர் தூவி திறந்து வைத்தார்.மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அசோக்குமார், நகராட்சி தலைவர் பாலகிருஷ்ணரெட்டி, ஒன்றிய சேர்மன் புஷ்பா முன்னிலை வகித்தனர். சப்-கலெக்டர் பிரவீன் நாயர், செயற்பொறியாளர் ஜெகநாதன், உதவி செயற்பொறியாளர் சாம்ராஜ், உதவி பொறியாளர் பார்த்தீபன், ஒன்றிய அ.தி.மு.க., துணை செயலாளர் சர்வேஷ், பொருளாளர் சிட்டிஜெகதீஷ், கூட்டுறவு சங்க தலைவர் நாகராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.கலெக்டர்

ராஜேஷ் நிருபர்களிடம் கூறியதாவது:கெலவரப்பள்ளி அணையின் வலதுபுற கால்வாயில் இருந்து, 26 கனஅடி தண்ணீரும், இடதுபுற கால்வாயில் இருந்து, 62 கன அடி தண்ணீரும் பாசனத்துக்கு திறந்துவிடப்பட்டுள்ளது.

வலதுபுற கால்வாய் மூலம், 2, 082 ஏக்கரும், இடதுபுற கால்வாய் மூலம், 5,918 ஏக்கர் விவசாய நிலங்களும் பாசன வசதி பெறுகிறது.இந்த தண்ணீர் திறப்பு மூலம் தட்டகானப்பள்ளி, பூதிநத்தம், பெத்தமுத்தாளி, அட்டூர், கதிரேப்பள்ளி, மாரசந்திரம், கொத்தூர், மோர்னப்பள்ளி, பெத்த கொல்லு உள்ளிட்ட, 22 கிராம விவசாயிகள் பயனடைகின்றனர். அணையின் நீர் இருப்பு மற்றும் எதிர்வரும் பருவமழையை பொறுத்து, 150 நாட்களுக்கு முறை வைத்து தண்ணீர் திறந்து விடப்படும்.இவ்வாறு கூறினார். விவசாயிகள் போர்க்கொடி: பாசன நீர் திறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த விவசாயிகள் கலெக்டர் ராஜேஷை சூழ்ந்து நின்று கூறியதாவது:கெலவரப்பள்ளி அணையை காட்டிலும் கே.ஆர்.பி., அணை ஒன்பது மடங்கு பெரிய அணை. அந்த அணைக்கு ஐந்து வழிகளில் நீர் ஆதாரம் கிடைக்கிறது. கெலவரப்பள்ளி அணைக்கு தென்பெண்ணை ஆற்றில் வரும் தண்ணீர் மட்டுமே கிடைக்கிறது.இந்த தண்ணீரையும் கே.ஆர்.பி., அணைக்கு திறந்து விடுவதால், விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். மேலும், அணையில் ஜூன் முதல் வாரத்தில் ஆண்டுதோறும் தண்ணீர் திறக்க வேண்டும், சாகுபடி முடியும் வரை கே.ஆர்.பி., அணைக்கு தண்ணீர் விடக்கூடாது. என கூறி முறையிட்டனர்.பதில் அளித்த கலெக்டர், ""மனுவாக எழுதி கொடுங்கள் அரசுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கிறேன்," என்றார்.

**முருங்கை வரத்து குறைந்ததால்கிலோவுக்கு ரூ.15 விலை உயர்வு**

ஈரோடு: ஈரோட்டில், முருங்கை காயின் வரத்து குறைந்ததால், கிலோவுக்கு, 15 ரூபாய் வரை முருங்கையின் விலை உயர்ந்துள்ளது.முத்தூர், வெள்ளக்கோவில், மூலனூர், தாராபுரம், குண்டடம் ஆகிய பகுதிகளில், முருங்கை சாகுபடியில் விவசாயிகள் அதிகம் பேர் ஈடுபட்டுள்ளனர். ஈரோடு, திருப்பூர், ஒட்டன்சத்திரம், பழனி ஆகிய பகுதிகளுக்கு, முருங்கை காய்கள், முருங்கை இலைகள் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.கடந்த இரு ஆண்டாக பருவமழை பொய்த்ததால், வறட்சி தாங்கி வளரக்கூடிய முருங்கை மரங்களும் பட்டுப்போனது. ஒரு சில விவசாயிகள் மட்டுமே, தங்களிடம் உள்ள குறைந்தபட்ச நீராதாரத்தை கொண்டு முருங்கை சாகுபடி செய்தனர். எனவே, மார்கெட்டுக்கு தினசரி சப்ளை செய்யப்படும், முருங்கைக் காய்களின் வரத்து குறைந்துள்ளது.கடந்த வாரம் கிலோ, 40 ரூபாய்க்கு விற்ற முருங்கைக் காய்கள், தற்போது, 50

முதல், 55 ரூபாய் வரை விற்பனையாகிறது. முருங்கையின் வரத்து மேலும் குறைய வாய்ப்புள்ளதால், விலை உயரும், என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**பயிர் வைப்பு கடனுக்கு 4 சதவீத வட்டிமத்திய அரசு பரிந்துரைக்கு கோரிக்கை**

ஈரோடு: "விவசாயிகளின் பயிர் கடனுக்கு வங்கிகள் வசூலிக்கும், மூன்று சதவீத வட்டிச் சலுகை போக, நான்கு சதவீத வட்டியை, பயிர் வைப்பு கடனுக்கு வங்கிகள் வசூலிக்க, மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும் பரிந்துரைக்க வேண்டுமென,' இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.இதுகுறித்து, இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கத்தலைவர் தெய்வசிகாமணி கூறியதாவது: தமிழகத்தில் மஞ்சள் உற்பத்தியில், ஈரோடு மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. உள்நாட்டு நிறுவனங்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி என ஆண்டு ஒன்றுக்கு, ஒன்றரை லட்சம் டன் மஞ்சள் வர்த்தகம் நடக்கிறது.மஞ்சள் விலை தொடர் சரிவால், கட்டுபடியாகும் விலை கிடைக்கும் வரை, விவசாயிகளும், வியாபாரிகளும் பல லட்சம் டன் மஞ்சளை குடோன்களின் இருப்பு வைத்துள்ளனர். கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ள வேளாண் விளை பொருட்களுக்கு, 10.25 முதல், 11.5 சதவீதம் வட்டி வசூலிக்கின்றனர்.மத்திய திட்டக்குழு, 2001, அக்டோபரில், கிடங்குகளில் இருப்பு வைக்கப்படும் பொருட்களுக்கான வட்டி விகிதத்தை மாற்றி, மத்திய அரசுக்கும், ரிசர்வ் வங்கிக்கும் அறிக்கை பரிந்துரை செய்தது.சிறு, குறு விவசாயிகளுக்கு, தனியார் மற்றும் பொதுத்துறை வங்கிகள், ஏழு சதவீதம் வட்டியில் பயிர் கடன் வழங்குகிறது.உரிய காலத்தில் கடனை திருப்பிச் செலுத்தினால், விவசாயிக்கு, மூன்று சதவீத வட்டியை சலுகையாக வழங்கி, நான்கு சதவீத வட்டியை மட்டுமே வசூலிக்க வேண்டும்.பயிர் கடனுக்கு உள்ள வழிமுறையை, பயிர் வைப்பு கடனுக்கும், பொதுத்துறை மற்றும் தனியார் வங்கிகள் பின்பற்ற வேண்டும் என திட்டக்குழு பரிந்துரைத்தது. 20 மாதங்கள் ஆகியும், மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும், பயிர் வைப்பு கடனுக்கு, நான்கு சதவீத வட்டியை பரிந்துரை செய்ய மறுக்கிறது.மஞ்சள் உள்ளிட்ட தானியங்களின் விலை சரிவடையும் நிலையில், பயிர் வைப்பு கடனுக்கு வட்டியை குறைக்க, மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்தால், இடைத்தரகர்கள் ஆதிக்கம் மறைந்து, விவசாயிகள் பாதிக்கப்படுவது தடுக்கப்படும், என்றார்.

**வறட்சி நிவாரணத்தில் முறைகேடுஅ.தி.மு.க., கவுன்சிலர் மீது புகார்**

ஈரோடு: ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்த குறைதீர் முகாமில், வறட்சி நிவாரணத்தில் முறைகேடாக பணம் பெற்றதாக, அ.தி.மு.க., கவுன்சிலர் மீது புகார் மனு

அளிக்கப்பட்டது.ஈரோடு மாவட்டம் சித்தோடு, செல்லப்பம்பாளையத்தை சேர்ந்த சிவசுப்ரமணியம், கலெக்டர் சண்முகத்திடம் மனு அளித்தார். அம்மனுவில் அவர் தெரிவித்ததாவது:ஈரோடு கரட்டுப்பாளையத்தை சேர்ந்தவர் சோமசுந்தரத்தின் மகன் பூவேந்திரகுமார். இவர், ஊராட்சி ஒன்றியத்தில், முதல் வார்டு அ.தி.மு.க., கவுன்சிலராக உள்ளார். இவரது குடும்பத்தினருக்கு, பவானி பெரியபுலியூர் கிராமத்தில், முக்கால் ஏக்கர் நிலம் மட்டும் உள்ளது.மாநிலம் முழுவதும் விவசாயிகளின் நலன்காக்க, வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. இதில், பொய்யான தகவலை கொடுத்து பூவேந்திரகுமார், பல லட்ச ரூபாய் மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

இவருக்கு சிறிதும் தொடர்பில்லாத காஞ்சிக்கோவில் தொடக்க வேளாண்மை கடன் சங்கத்தில், பூவேந்திரகுமார் கணக்கு எண், 7379 மூலம், 32 ஆயிரம் ரூபாயை வறட்சி நிவாரணமாக பெற்றுள்ளார். மேலும், அவரது மனைவி சம்பூர்ணம் பெயரில், 7353 கணக்கு எண்ணில், 28 ஆயிரம் ரூபாயும், பூவேந்திரகுமாரின் பினாமிகளான, அமுதா, 7373, சரஸ்வதி, 7375, வைத்தீஸ்வரன், 7382, ஆனந்தன், 6901, முருகேசன், 7239, பழனிசாமி, 7011, கவுதம், 7233, பார்வதி, 7387, வேணி, 7420 உள்பட பலர் மோசடியாக வறட்சி நிவாரணம் பெற்றுள்ளனர்.மோசடியில் ஈடுபட்ட பூவேந்திரகுமாரை, கவுன்சிலர் பொறுப்பில் இருந்து நீக்கி, அவரையும், அவரது குடும்பத்தினர், பினாமிகளையும் கைது செய்ய வேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்திருந்தார்.இதுகுறித்து ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் பூவேந்திரகுமாரை, செல்ஃபோனில் தொடர்பு கொண்ட போது, "அரசியலில் நான் வளர்ந்து வருவதால், என் மீது உள்ள அரசியல் காழ்ப்புணர்ச்சியில் சிலர் இதுபோன்ற வதந்திகளை பரப்பி வருகின்றனர். எனது மொபைலில் பழுது இருப்பதால், நான் பிறகு பேசுகிறேன்,' என்றார்.

**நீலகிரியில் பழங்களின் சீசன்**

குன்னூர்:நீலகிரியில் ஆரஞ்சு, பேரிக்காய் உள்ளிட்ட பழங்களின் சீசன் துவங்கியுள்ளது. நீலகிரியில் குன்னூர், கரும்பாலம், கிளிஞ்சடா, மஞ்சக்கொம்பை உட்பட பல பகுதிகளில் பேரிக்காய், ஆரஞ்சு பழங்களும், பர்லியாறு பகுதிகளில் பப்ளிமாஸ், எடப்பள்ளி, கட்டபெட்டு ஆகிய பகுதிகளில் பப்பினோ, பேசன் ப்ரூட் ஆகிய பழங்கள் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது, இந்த பழங்களின் சீசன் துவங்கியுள்ளது. ஆரஞ்சு பழங்கள் தற்போது அறுவடை செய்யப்பட்டு, கிலோ 40 ரூபாய் முதல் 60 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இதே போல, பேரிக்காய் சாகுபடியும் அதிகரித்துள்ளது. குன்னூரின் சில பகுதிகள், எடப்பள்ளி, கட்டபெட்டு மற்றும் கோத்தகிரியில் பேரிக்காய் அறுவடை அதிகரித்துள்ளது. பேரிக்காய் கிலோ

ஒன்று 90 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை விலை கிடைத்து வருகிறது.விவசாயிகள் பெங்களூருக்கு பேரிக்காயை அனுப்பி வைக்கின்றனர். அங்குள்ள ஜாம் தயாரிப்பு நிறுவனங்கள் நேரடியாக பேரிக்காய்களை கொள்முதல் செய்து செல்கின்றனர். மேலும், ஒரு டன்னுக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை விலை கொடுத்து வாங்கி செல்வதால், விவசாயிகள் அவர்களுக்கு பேரிக்காய்களை மொத்தமாக விற்று விடுகின்றர். இதனால், மார்க்கெட்டுக்கு வரும் பேரிக்காய் வரத்து குறைந்துள்ளது.

மாவட்டம் முழுவதும் மருத்துவ குணம் நிறைந்த பழங்கள் சீசன் துவங்கி, விற்பனைக்கு வந்துள்ளதால் உள்ளூர் மற்றும் சுற்றுலாப்பயணிகள் பழங்களை தேடி பிடித்து வாங்கிச் செல்கின்றனர்.

**காற்றால் பாதித்த வாழை விவசாயிக்கு நிவாரணம் :குறைதீர் கூட்டத்தில் கலெக்டரிடம் மனு**

திருச்சி: "டெல்டா விவசாயிளுக்கு வழங்கியதுபோல, சூறைக்காற்றால் பாதித்த வாழை பயிர்களுக்கு நஷ்டயீடு வழங்க வேண்டும்' என, வாழை விவசாயிகள் கலெக்டரிடம் மனு அளித்தனர்.திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் கூட்டம் நேற்று நடந்தது. கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமை வகித்தார். கூட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் அயிலை சிவசூரியன், தமிழ்நாடு தோட்டப்பயிர்கள் சாகுபடியாளர்கள் சங்க மாநில செயலாளர் புலியூர் நாகராஜன் ஆகியோர் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:கடந்த ஆண்டு கடும் வறட்சி காரணமாக பயிர்கள் பாதிக்கப்பட்டது. நெல் பயிருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. திருச்சி, கரூர் மாவட்டங்களில், 30 ஆயிரம் ஏக்கர் வாழைகள், கடந்த ஏப்ரல் மாதம் வீசிய சூறைகாற்றில் நாசமாயின.காவிரி டெல்டா விவசாயிகளுக்கு ஏக்கருக்கு, 15 ஆயிரம் நிவாரணம் வழங்கியதுபோல, வாழை விவசாயிகளுக்கு செலவு தொகையை ஈடுகட்டும் வகையில் நிவாரணம் தரவேண்டும். வங்கி கடனை தள்ளுபடி செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.திருச்சி மாநகர தரைக்கடை வியாபாரிகள் சங்க மாவட்ட தலைவர் அன்சார்தீன் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:திருச்சி என்.எஸ்.பி., ரோடு, தெப்பக்குளம் நந்தி கோவில் தெரு பகுதிகளில் பெருமளவில் தரைக்கடை வியாபாரிகள் உள்ளனர். இவர்கள், தரைக்கடை வியாபாரத்தில் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் தான் தங்கள் குடும்பத்தை காப்பாற்றி வருகின்றனர்.இந்நிலையில், இவர்களுக்கு மாற்று இடம் தருவதாக கூறி, வியாபாரம் இல்லாத இடங்களான சங்கரன் பிள்ளை ரோடு, இ.பி., ரோடு, டவுன் ஹால், திப்பிரான் தொட்டி தெரு என மாநகராட்சி நிர்வாகம் மாற்ற நினைக்கிறது. சாலையோர சிறுகடை வியாபாரிகளுக்கான தேசியக் கொள்கையில், "எங்களை போன்ற வியாபாரிகளை ஒழுங்குபடுத்தி எங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும்' என கூறியுள்ளது. ஆனால், வியாபாராம் இல்லாத பகுதிகளுக்கு போக சொன்னால், எவ்வாறு வாழ முடியும்?.

நாங்கள் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்ள நேரிடும். ஆகையால், தாங்கள் தலையிட்டு, ஏற்கனவே வியாபாரம் செய்த இடங்களிலேயே தரைக்கடை வியாபாரிகளை வியாபாரம் செய்ய அனுமதித்து, எங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.திருவெறும்பூரை அடுத்த வாழவந்தான்கோட்டையை சேர்ந்த விவசாயி அந்தோணிசாமி அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:அரசு அதிகாரிகள் ஆலோசனையின் பேரில், 2012ம் டிசம்பர், 17ம் தேதிக்கு மேல் நெற்பயிர் சாகுபடி செய்தோம். டிச., 15ம் தேதிக்குள் நடவு செய்த ஒரு சிலருக்கு காப்பீடு தொகை தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் பெற்றவர்கள் காப்பீட்டு தொகையை, சங்கம் மூலம் செலுத்தப்பட்டு இவர்கள் அனைவருக்கும் நிவாரணத்தொகை கிடைத்துள்ளது.காப்பீடு செய்யாத டிச., 17ம் தேதிக்கு மேல் நெற்பயிர் நடவு செய்த விவசாயிகளின் நிலங்களை, வி.ஏ.ஓ., மற்றும் வேளாண் துறை அலுவலர்களின் மூலம் கணக்கு எடுத்து, நிவாரணத்தொகை தமிழக அரசு மூலம் அவரவர் பெயரில் வாழவந்தான்கோட்டை தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி கணக்கில் செலுத்தி உள்ளதாக தெரிகிறது. வங்கியில் உள்ள நிவாரணத்தொகையை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.கலெக்டர் எச்சரிக்கை! பொதுமக்கள் குறைதீர் கூட்டத்துக்கு மனு அளிக்க வரும் மக்களுக்காக, கலெக்டர் அலுவலகத்தில் இலவசமாக மனு எழுதித்தரப்படுகிறது. இதுதவிர, டி.ஆர்.டி.ஏ., அலுவலகத்தில் சிலர் பணம் வாங்கிக்கொண்டு மனு எழுதுகின்றனர். கலெக்டர் ஜெயஸ்ரீ திடீரென அங்கு சென்று, பணம் வாங்கி மனு எழுதுபவர்களை எச்சரித்தார். "பணம் வாங்கிக் கொண்டு மனு எழுதினால், கைது நடவடிக்கை பாயும்' என எச்சரித்தார்.

**வைகை அணையில் கூடுதல் நீர் தேக்குவதில் சிக்கல் 12 அடி உயரத்திற்கு சகதி படிந்துள்ளதால்**

தேனி:வைகை அணையில்,12 அடி உயரத்திற்கு சகதி படிந்துள்ளதால், கூடுதல் நீர் தேக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அணையை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும். தேனி மாவட்டம், வைகை அணையில் தற்போது 12 அடிக்கு மண், சகதி படிந்துள்ளது. நீர்த் தேக்கப்பகுதியில் ஆக்கிரமிப்புகள் அதிகம் உள்ளது. மண் படிவுகளையும், ஆக்கிரமிப்புகளையும் முழுமையாக அகற்ற வேண்டும்.

*அணையின் ஏழு மேல் மதகுகளும், ஏழு கீழ் மதகுகளும் துருப்பிடித்த நிலையில், அவ்வப்போது மட்டும் தற்காலிகமாக புதுப்பிக்கப்படுவதால், புதிய மதகுகளை பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

* பூங்கா பராமரிப்பு என்ற பெயரில், ஆண்டு தோறும் பல லட்சம் ரூபாய் முறைகேடாக செலவிடப்படுகிறது. இந்த முறைகேட்டை தடுக்க வேண்டும்.

* பூங்கா பராமரிப்பு, அணை பராமரிப்பு, மீன்பிடிப்பு, மீன் விற்பனை அனைத்தும் பல

ஆண்டுகளாகவே ஒரு குறிப்பிட்ட சிலரிடம் உள்ளது. இதில் மாதந்தோறும் பல லட்சம் ரூபாய் முறைகேடு நடக்கிறது.

* முழுமையாக அணை தூர்வாரப்பட்ட பின், படகு போக்குவரத்து துவங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் கேட்ட போது, "1958ல் வைகை அணை கட்டப்பட்ட போது, அதன் முழு கொள்ளவு 6878 மில்லியன் கனஅடி. தற்போது 14.16 சதவீதம் மண், சகதி படிவு ஏற்பட்டுள்ளது. இதனால் 973 மில்லியன் கனஅடி நீர் மட்டுமே தேக்க முடியும். தற்போது, அணையின் கொள்ளளவு 5906 மில்லியன் கனஅடி மட்டுமே. வைகை அணை நீர் மட்டத்தை, 2 மீட்டர் அதாவது ஏழு அடி உயர்த்தினால் கரையில் உள்ள 25 கிராமங்கள் மூழ்கி விடும். எனவே தூர்வார வேண்டும். தூர்வாரும் மண்ணை கொட்டுவதற்கு 6 ஆயிரம் ஏக்கர் நிலம் தேவை. எனவே இந்த மண்ணை வைகை அணையில் இருந்து ராமநாதபுரம் மாவட்டத்தின் கடைசி கால்வாய் வரை உள்ள வைகை கரையில் கொட்டி கரையையும் பலப்படுத்தலாம். ஏற்கனவே பாராளுமன்ற நிலைக்குழு இதனை பரிந்துரைத்துள்ளது, என்றனர்.

**பரமக்குடி வீடுகளில் மாடித்தோட்டம் பயிற்சி "தினமலர்' கட்டுரை மூலம் விளக்கம்**

பரமக்குடி: பரமக்குடியில் மாடித்தோட்டம் அமைத்தல் தொடர்பாக, வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நடந்த பயிற்சியில், "தினமலர்' நாளிதழில் வெளியாகும் "மாடி வசந்தம்' என்ற பகுதியில் இடம் பெற்ற கட்டுரைகள், புகைப்படங்கள் மூலம் விளக்கமளிக்கப்பட்டன. நகராட்சி தலைவர் கீர்த்திகா முன்னிலை வகித்தார். வேளாண்மை பயிற்சி நிலைய தலைவர் சக்திவேல் தொழில் நுட்ப விளக்கமளித்தார். மாடி தோட்ட விவசாயி, சின்னாளப்பட்டி ரஞ்சிதம் பெண்களுக்கு தங்களது அனுபவங்களை விளக்கி பேசினர். ராமநாதபுரம் தோட்டக்கலை துணை இயக்குநர் இளங்கோவன் தலைமை வகித்து பேசும்போது, " "தினமலர்' நாளிதழில் சனிக்கிழமைகளில் வெளிவரும் "மாடி வசந்தம்' பகுதியில் வெளியான கட்டுரைகள், புகைப்படங்கள் மூலம் விளக்கமளிக்கப்பட்டு வருகிறது, என்றார். இப்பயிற்சி வகுப்பில் 75க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் இலவசமாக விதைகள் வழங்கப்பட்டன. மேலும் விபரம் பெற பரமக்குடி தோட்டக்கலை உதவி இயக்குநர் சேகரை, 94439 61971 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொள்ளலாம். தோட்டக்கலை அலுவலர் சத்யா நன்றி கூறினார்.

**மழை இல்லாததால் தானிய உற்பத்தி பாதிப்பு**

காளையார்கோவில்:காளையார்கோவிலில் மழை பொய்த்து வருவதால்,விவசாயிகளின் பாரம்பரிய சிறுதானிய உற்பத்தி முழுமையாக அழிந்து வருகிறது. இவ் ஒன்றியத்தில் 30 ஆண்டுகளுக்கு முன் பருவமழை அதிகம் பெய்தது.விவசாயிகளும் கண்மாய் பாசனத்தை நம்பி நஞ்சை நிலங்களில் நெல்சாகுபடி,புஞ்சை நிலங்களில் மானாவாரி பயிராக கம்பு, குதிரைவாலி, கேழ்வரகு, கேப்பை, திணை, சோளம்,மக்காச்சோளம் மற்றும் பயறுவகைகளை பயிரிட்டு மகசூல்பார்த்தனர்.நாளடைவில் பருவமழை பொய்த்து வருவதால், புஞ்சை நிலங்களில் உழவு பணி செய்யமுடியாமல் காடாக மாறி வருகிறது. மானாவாரி பயிர் சாகுபடி முழுமையாக பாதித்து, சிறுதானிய உற்பத்தியும் அழிந்து விட்டது. மரக்காத்தூர் விவசாயி சங்கன் கூறுகையில்,"" வயல்களில் இயற்கை உரமிட்டு நெல்நாற்று நடவுசெய்து வந்தோம். நோய்தாக்குதல் இல்லாமல் நல்ல மகசூல் கிடைத்தது. புஞ்சை நிலங்களில் மானாவாரியாக சிறுதானியங்கள் விதைப்பதுடன் எங்கள் பணி முடிந்து விடும். தானாக வளர்ந்து மகசூல் கிடைக்கும்.கூடுதல் லாபமும் கிடைத்துவந்தது. கடந்த 20 ஆண்டுகளாக பருவ மழை கிடையாது.இதனால் சிறுதானிய உற்பத்தியும் அழிந்து விட்டது," என்றார்.

**விவசாய குழுக்களுக்கு ரூ.11லட்சத்தில் கருவிகள்**

சிவகங்கை:சிவகங்கையில்,விவசாய பொறியியல் துறை மூலம், விவசாய குழுக்களுக்கு ரூ.11.72 லட்சம் கருவிகளை கலெக்டர் ராஜாராமன் வழங்கினார். விவசாய பொறியியல் துறை சார்பில், 4 விவசாய துணை குழுக்கள் அமைக்கப்பட்டது. இந்த குழுக்களுக்கு அரசு முழு மானியத்துடன் கூடிய, விவசாய கருவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. கலெக்டர் ராஜாராமன் தலைமை வகித்தார். பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழக தலைவர் செந்தில்நாதன் முன்னிலை வகித்தார். குமாரக்குறிச்சி, காளையார்கோவில், திருப்புவனம், சிவகங்கை, மானாமதுரை ஒன்றிய குழுக்களை சேர்ந்தவர்களுக்கு, அரசு முழு மானியத்துடன் தலா ரூ.1.02 லட்சம் மதிப்பிலான பவர் டிரில்லர், தலா ரூ.1.66 லட்சம் மதிப்பில் நெல் நாற்று நடவு இயந்திரம், தலா ரூ.24 ஆயிரத்து 450 மதிப்பில் களைஎடுக்கும் கருவிகள் உட்பட ரூ.11.72 லட்சம் மதிப்பிலான பொருட்கள் வழங்கப்பட்டது. மாவட்ட ஊராட்சி தலைவர் சிவதேவ்குமார், விவசாய பொறியியல் துறை செயற்பொறியாளர் ராஜகோபால், உதவி செயற்பொறியாளர் ஹென்றி, உதவி பொறியாளர் நவசக்தி பங்கேற்றனர்.

**நெல்லையில் விவசாயிகள் மண் பரிசோதனை அடிப்படையில் உரங்களை இட வேண்டும்: வேளாண்மை இணை இயக்குனர் வேண்டுகோள்**

திருநெல்வேலி:விவசாயிகள் மண் பரிசோதனை அடிப்படையில் பயிர்களுக்கு, பரிந்துரை செய்யப்பட்ட அளவே தழைச்சத்து தரும் யூரியா உரத்தினை இடவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.இதுகுறித்து நெல்லை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சவுந்திரராஜன் கூறியதாவது:நெல்லை மாவட்டத்தில் தென்மேற்கு பருவமலை உரிய காலத்தில் துவங்கப்பட்டதின் காரணமாக அணைகளில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதனால் கார் பருவநெல் சாகுபடி, விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு தேவையான விதைகள், உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.விவசாயத்திற்கு தேவையான முக்கிய இடுபொருளான, உரங்கள் தாராளமாக கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் தமிழக அரசு 150 கோடி டான்பெட் நிறுவனத்திற்கு வட்டியில்லா முன்பணம் வழங்கியுள்ளது.இதனை கொண்டு டான்பெட் நிறுவனம் டி.ஏ.பி.,உரத்தினை கொள்முதல் செய்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளின் மூலம் விநியோகம் செய்து வருகிறது.இதுதவிர தமிழக அரசு உரங்களின் மீதான 4 சத மதிப்பு கூட்டப்பட்ட வரியிலிருந்து விலக்கு அளித்துள்ளது. இதன் மூலம் 50 கிலோ மூட்டை ஒன்றுக்கு ரூ.11 முதல் 52 வவைர உரங்களின் விலை குறைந்துள்ளது.தற்போது யூரியா உரங்கள் மட்டும் மிகக்குறைந்த விலையில் கிடைக்கிறது. எனவே விவசாயிகள் அதிக அளவில் யூரியா உரத்தினை வாங்கி பயன்படுத்தி வருகிறார்கள்.யூரியா போன்ற தழைச்சத்தை அளிக்க கூடிய உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவினை விட, அதிக அளவில் பயன்படுத்தினால் பயிர்களின் வளர்ச்சி அதிகரித்து, பூச்சி நோய் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும். இதன் மூலம் மகசூல் குறைய வாய்ப்புள்ளது. விவசாயிகளின் ஒருங்கிணைந்த கையேட்டில் உள்ள மண்வள பரிசோதனையின் அடிப்படையில் அல்லது பொது பரிந்துரையின் பேரில் உரங்களை இட விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். யூரியாவுடன், மணி மற்றும் சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களை தவறாமல் விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். மேலும் விவசாயிகளிடையே சிறிய அளவிலான யூரியா உரங்கள் அதிக பலனை தரக்கூடியது என்ற தவறான எண்ணம் நிலவி வருகிறது. குருணை வடிவிலான யூரியா மற்றும் சிறிய அளவிலான யூரியா இரண்டிலும் தழைச்சத்து 46 சதம் தான் உள்ளது. எனவே எந்த வடிவில் இருந்தாலும் எவ்வித சந்தேகமும் இன்றி யூரியா உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவினை மட்டும் இட்டு பலனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.மேலும் உரங்களை வாங்கும்போது, உர விற்பனை நிலையங்களில் தவறாமல் ரசீதினை கேட்டு பெறவும், மூட்டையில் உள்ள விற்பனை விலையினை சரிபார்த்தும் வாங்கிக்கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**மரக்கன்றுகள் மாவட்டம் முழுவதும் நட வனத்துறை முடிவு மரம் வளர்ப்பு திட்டத்தில் பயன்பெற மக்களுக்கு அழைப்பு வனசரகங்களில் இலவசமாக பெற்றுகொள்ளலாம்**

தூத்துக்குடி:தூத்துக்குடி மாவட்டத்தில் வனத்துறை மூலம் மரம் வளர்ப்பு திட்டத்தில் முதலமைச்சர் பிறந்தநாளையொட்டி 2லட்சம் மரக்கன்றுகள் நட முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கடந்த சில வருடங்களாக காலநிலைகளில் கடும் மாற்றம் ஏற்பட்டுவருகிறது. மழைபெய்யவேண்டிய காலகட்டத்தில் கோடை வெயிலை மிஞ்சும் அளவுக்கு வெயில் வாட்டி வதைத்து வருகிறது. மாநிலததில் ஒரு சில இடங்களை தவிர பெரும்பாலான இடங்களில் போதுமான மழை இல்லாமல் வறட்சியான நிலைதான் ஏற்பட்டுள்ளது.பொதுவாக ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் பெரும்பாலான குளங்கள்,கண்மாய்கள் நிரம்பி இருக்கும். கேரளா மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகளில் பெய்துவரும் மழையினால் தற்போது திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அணைகள் நிரம்பிவருகிறது. பருவம் தவறி மழை பெய்துவருவதற்கு சுற்றுப்புற ‹ழ்நிலைகள் ஒரு காரணமாக இருந்தாலும் மழையை கொண்டுவரும் மரங்கள் போதுமான அளவு இல்லாமல் இருந்துவருகிறது. நான்குவழிச்சாலைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்காக மாநிலம் முழுவதும் பல ஆயிரக்கணக்கான மரங்கள் அடியோடு வெட்டி அழிக்கப்பட்டது. இதனால் மழைஇல்லாமலும் சுற்றுப்புற ‹ழ்நிலைகளும் மிக மோசமாக பாதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தமிழ்நாடு அரசு வனத்துறை மூலம் முதலமைச்சரின் 65 வது பிறந்த நாளையொட்டி மரம் வளர்ப்பு திட்டத்தின் கீழ் மாவட்டம் முழுவதும் 2 லட்சம் மரக்கன்றுகள் இலவசமாக நடவு செய்து கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. செம்மண் மற்றும் உரம் கொடுத்து நட விரும்புவோர் தூத்துக்குடி மாவட்டத்தில் வனசரகங்களை தொடர்பு கொண்டு மரக்கன்றுகளை பெற்றுகொள்ளலாம். இதுகுறித்து மாவட்ட வன அலுவலர் செண்பகமூர்த்தி கூறியுள்ளதாவது: மரம்வளர்ப்பு திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் உள்ள அரசு கல்லூரிகள், தனியார் கல்லூரிகள் பள்ளிகள்,மற்றும் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், வழிபாட்டுதலங்கள் மற்றும் தனியார் நிலங்களில் மரக்கன்றுகள் நட விரும்புவோர் திருச்செந்தூர், சாத்தான்குளம், தூத்துக்குடி, ஓட்டப்பிடாரம், ஸ்ரீவைகுண்டம், எட்டயபுரம், விளாத்திகுளம், கோவில்பட்டி ஆகிய இடங்களில் உள்ள வனசரக அலுவலர்களை தொடர்பு கொண்டு மரக்கன்றுகளை பெற்றுகொள்ளலாம். மேலும் வனகரக அலுவலர்களால் நடப்படும் மரக்கன்றுகளை தண்ணீர் ஊற்றி, உரமிட்டு பராமரிக்க வேண்டும். விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொண்டு பயன் பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**விவசாய தொழிலாளர் சங்க கூட்டம்**

கோவில்பட்டி: கோவில்பட்டி அருகே வெயிலுகந்தபுரத்தில் விவசாய தொழிலாளர் சங்க கூட்டம் நடந்தது.

கோவில்பட்டி அருகேயுள்ள வானரமுட்டி வெயிலுகந்தபுரம் கிராமத்தில் இந்திய விவசாய

தொழிலாளர் சங்க கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு சுந்தரவேல் தலைமை வகித்தார். தொடர்ந்து இந்திய கம்யூ., மாநிலக்குழு உறுப்பினர் அழகுமுத்துபாண்டியன் கலந்து கொண்டு சங்க அமைப்பு நிலை, செயல்பாடு, விளைவுகள் குறித்து பேசினார். இதையடுத்து சங்க கிளை நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் தலைவராக அழகர்சாமி, செயலாளராக பாஸ்கரன், பொருளாளராக அமல்ராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மேலும் நிர்வாகிகளாக தனலட்சுமி, பங்காரு, உஷாதேவி, காளியம்மாள், ரஞ்சிதம், ஆரோக்கியம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். தொடர்ந்து நடந்த கூட்டத்தில் தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் துவங்கிய நாளிலிருந்து வெயிலுகந்தபுரத்திற்கு எந்தப்பணியும் வழங்கப்படாததால் பணித்தொகுப்பு அமைக்கவும், கிராமத்தில் பகுதிநேர ரேஷன் கடை அமைக்கவும் வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் இந்திய கம்யூ., கோவில்பட்டி நகர செயலாளர் பரமராஜ், அய்யலுசாமி, சரோஜா, பாபு, சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தால் 'ஆகஸ்டு மாதத்துக்கான 50 டி.எம்.சி. தண்ணீரை திறந்து விட பரிசீலிப்போம்' காவிரி மேற்பார்வை குழு கூட்டத்தில் கர்நாடகம் உறுதி**

பருவமழை நன்றாக பெய்து அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தால், ஆகஸ்டு மாதத்துக்கான 50 டி.எம்.சி. தண்ணீரை திறந்து விடுவது பற்றி பரிசீலிப்போம் என்று டெல்லியில் நடந்த காவிரி மேற்பார்வை குழு கூட்டத்தில் கர்நாடகம் உறுதி அளித்தது.

காவிரி மேற்பார்வை குழு கூட்டம்

காவிரி நீரை சம்பந்தப்பட்ட மாநிலங்கள் பகிர்ந்து கொள்வது தொடர்பான இறுதித்தீர்ப்பை நடுவர் மன்றம் கடந்த 2007–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெளியிட்டது. பின்னர் தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்ததையடுத்து நடுவர் மன்ற தீர்ப்பு மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. ஆனால் நடுவர் மன்றம் இறுதித்தீர்ப்பை வழங்கி 6 ஆண்டுகள் ஆகியும், அந்த தீர்ப்பை அமல்படுத்த காவிரி மேலாண்மை வாரியமும், காவிரி நிர்வாக ஒழுங்குமுறை ஆணையமும் அமைக்கப்படாததால், அவற்றை அமைக்க மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி சுப்ரீம் கோர்ட்டை தமிழக அரசு மீண்டும் நாடியது. இவற்றை மத்திய அரசு அமைக்க காலதாமதம் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டதால், இடைக்கால ஏற்பாடாக காவிரி மேற்பார்வை குழு அமைக்கப்பட்டது.

டெல்லியில் கூடியது

இந்த குழுவின் முதல் கூட்டம் கடந்த ஜூன் 1–ந்தேதியும், 2–வது கூட்டம் ஜூன் 12–ந்தேதியும் நடந்தது. இந்த இரு கூட்டங்களிலுமே தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்து விட முடியாத நிலையில் இருப்பதாக கர்நாடகம் கூறி விட்டது. இந்த நிலையில் மேற்பார்வை குழுவின் 3–வது கூட்டம் நேற்று டெல்லியில் மத்திய நீர்வளத்துறை செயலாளர் அலோக் ராவத் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழக அரசின் சார்பில் தலைமைச்செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன், பொதுப்பணித்துறை செயலாளர் சாய்குமார் மற்றும் கர்நாடகம், கேரளா, புதுச்சேரி மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள், உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தமிழகம் கோரிக்கை

இந்த கூட்டத்தில் தமிழக அரசின் தலைமைச்செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் பேசுகையில்; கர்நாடகம் ஆகஸ்டு மாதம் வழங்க வேண்டிய 50 டி.எம்.சி. (ஒரு டி.எம்.சி. என்பது 100 கோடி கன அடி) தண்ணீரையும், ஏற்கனவே பாக்கி வைத்துள்ள தண்ணீரையும் திறந்து விடுமாறு உத்தரவிட

வேண்டும் என்று கூறினார். அத்துடன், நடுவர் மன்ற இறுதித்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளபடி கர்நாடகம் தண்ணீர் திறந்து விட வேண்டும் என்றும் தமிழக அரசின் சார்பில் வற்புறுத்தப்பட்டது.

<u>கர்நாடகம் பரிசீலிக்கும்</u>

கர்நாடக அரசின் தலைமைச்செயலாளர் ரெங்கநாத் பேசுகையில்; தமிழ்நாட்டுக்கு ஜூலை மாதம் வழங்க வேண்டிய 34 டி.எம்.சி. தண்ணீரில் 24 டி.எம்.சி.யை வழங்கி விட்டதாகவும், எஞ்சியுள்ள 10 டி.எம்.சி. தண்ணீர் இந்த மாத இறுதிக்குள் திறந்து விடப்படும் என்றும் கூறினார். மேலும் பருவமழை நன்றாக பெய்து அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிக்கும் பட்சத்தில் ஆகஸ்டு மாதத்துக்கான 50 டி.எம்.சி. தண்ணீரும் திறந்து விடுவது பற்றி பரிசீலிப்போம் என்றும் அவர் தெரிவித்தார். கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் பற்றிய விவரங்களை மத்திய நீர்வளத்துறை செயலாளர் அலோக் ராவத், சுப்ரீம் கோர்ட்டில் அறிக்கையாக தாக்கல் செய்வார் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

**ராணிப்பேட்டை கோட்டத்தில் கால்நடைகளுக்கான சிகிச்சை முகாம்கள் வி.கே.ஆர்.சீனிவாசன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்**

ராணிப்பேட்டை கோட்ட கால்நடைபரமாரிப்பு துறையின் சார்பில் நடப்பு ஆண்டிற்கான முதல் – அமைச்சரின் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் தொடக்க விழா விளாப்பாக்கத்தில் நேற்று நடைபெற்றது.இந்த கால்நடை பாதுகாப்பு திட்டம் 2013 –14 திட்டத்தின்கீழ் ராணிப்பேட்டை கோட்ட கால்நடை பராமரிப்புத்துறையின்கீழ் உள்ள ஆற்காடு, வாலாஜா, அரக்கோணம் தாலுகா பகுதிகளில் மொத்தம் 100 முகாம்கள் நடைபெற உள்ளது.இந்த முகாம்களுக்கான தொடக்க விழா மற்றும் விளாப்பாக்கம், கூராம்பாடி, சின்னதக்கை, நாராயணபுரம், உப்புபேட்டை ஆகிய பகுதிகளுக்கான கால்நடை மருத்துவ முகாம் விளாப்பாக்கத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு விளாப்பாக்கம் பேரூராட்சி மன்ற தலைவர் செல்விராமசேகர் தலைமை தாங்கினார். கால்நடை பாரமரிப்புத்துறை உதவி இயக்குநர் டாக்டர் மணி வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக ஆற்காடு வி.கே.ஆர்.சீனிவாசன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கால்நடை மருத்துவ முகாமை தொடங்கி வைத்து, சிறப்பாக கால்நடைகளை பராமரித்தவர்களுக்கு பரிசு மற்றும் தீவன சோளத்திற்கான விதைகள் வழங்கி பேசினார்.விழாவில் விளாப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் சரவணன், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி தலைவர் ராமசேகர், பேரூராட்சி துணை தலைவர், உறுப்பினர்கள், மகளிர் குழுவினர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் லட்சுமணன் நன்றி கூறினார். இதில் பொதுமக்கள், விவசாயிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.முகாமில் மொத்தம் 2 ஆயிரத்து 812 ஆடுகளுக்கும், ஆயிரத்து 254 மாடுகளுக்கும் பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக கால்நடை மருத்துவ குழுவினர் தெரிவித்தனர்.

**நீர்வரத்து தொடர்ந்து அதிகரிப்பு மேட்டூர் அணை நீர்மட்டம் 70 அடியாக உயர்வு**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், அணையின் நீர்மட்டம் 70 அடியாக உயர்ந்தது.

கர்நாடகாவில் மழை

கர்நாடக மாநிலத்தில் மழை தீவிரம் அடைந்து வருவதால் அம்மாநிலத்தில் உள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகள் உள்பட முக்கிய அணைகள் அனைத்தும் அதன் முழு கொள்ளளவை எட்டி பிடிக்கும் நிலையில் உள்ளன. இதன் காரணமாக இந்த அணைகளுக்கு வரும் தண்ணீர் அப்படியே காவிரி ஆற்றில் திறந்து விடப்படுகிறது.

இதனால் மழை தீவிரம் அடையும் காலங்களில் இந்த அணைகளில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு அதிகரித்தும், மழை குறையும் காலங்களில் திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு குறைத்தும் திறக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் கடந்த 4 நாட்களாக கர்நாடகாவில் பெய்யும் மழை அதிகரித்து வருவதால், கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவும் கடந்த 4 நாட்களாக படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது.

நீர்மட்டம் 70 அடியாக உயர்வு

இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. அதாவது, கடந்த 13–ந் தேதி அணைக்கு வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி வீதம் வந்து கொண்டிருந்த தண்ணீர் வரத்து 14–ந் தேதி வினாடிக்கு 14 ஆயிரம் கனஅடியாகவும், நேற்று மாலை வினாடிக்கு 17 ஆயிரம் கனஅடியாகவும் வந்தது.

இதனால் அணையின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. நேற்று மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 69.01 அடியாக உயர்ந்தது. இது இரவில் 70 அடியை தொட்டது.

80 அடியை எட்ட வாய்ப்பு

இந்த நிலையில் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் அணையின் நீர்மட்டம் மளமளவென உயர்ந்து 80 அடியை எட்டிப்பிடிக்க சாத்தியக்கூறுகள் உள்ளது. நீர்மட்டம் 80 அடியாக அதிகரித்து அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடிக்கு மேல் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தால், விரைவில் டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணை திறக்க வாய்ப்பு உள்ளது. தற்போது அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

**முதல்–அமைச்சர் உத்தரவுப்படி ஓசூர் கெலவரப்பள்ளி அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு 8 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்**

முதல்அமைச்சர் ஜெயலலிதா உத்தரவுப்படி ஓசூர் கெலவரப்பள்ளி அணையில் இருந்து பாசனத்திற்காக நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன் மூலம் 22 கிராமங்களை சேர்ந்த 8 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

**தண்ணீர் திறப்பு**

ஓசூர் கெலவரப்பள்ளி அணையில் இருந்து இரு பிரதான கால்வாய்களில் முதல்போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும் என்று முதல்அமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார். அதன்படி ஓசூர் கெலவரப்பள்ளி அணையில் இருந்து வலதுபுற பிரதான கால்வாய், இடதுபுற பிரதான கால்வாய் மற்றும் பிரிவு கால்வாய்களில் முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடும் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

நிகழ்ச்சிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தலைமை தாங்கி, தண்ணீரை திறந்து வைத்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

**8 ஆயிரம் ஏக்கர் நிலம்**

தமிழக முதல்அமைச்சர் உத்தரவுப்படி, ஓசூர் கெலவரப்பள்ளி அணையில் இருந்து தற்போது பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. கெலவரப்பள்ளி அணையின் இடதுபுற பிரதான கால்வாய் மற்றும் கிளைக்கால்வாய் மூலம் 5 ஆயிரத்து 918 ஏக்கரும், வலதுபுற பிரதான கால்வாய் மூலம் 2 ஆயிரத்து 82 ஏக்கரும் என ஆக மொத்தம் 8 ஆயிரம் ஏக்கர் புன்செய் நிலங்கள் பயன் அடைகின்றன.

இதன் மூலம் ஓசூர் தாலுகாவில் உள்ள தட்டகானப்பள்ளி, பூதிநத்தம், பெத்த முத்தாளி, முத்தாளி, அட்டூர், கதிரேப்பள்ளி, மாரசந்திரம், கொத்தூர், மோரனப்பள்ளி, தொரப்பள்ளி, திருச்சிப்பள்ளி, காமன்தொட்டி, தின்னூர் சுபகிரி, கோனேரிப்பள்ளி, சின்னகுள்ளு, பெத்தகுள்ளு, சாமனப்பள்ளி, சென்னத்தூர், அட்டகுறுக்கி, நல்லகானகொத்தப்பள்ளி, மருதாண்டப்பள்ளி ஆகிய 22 கிராமங்கள் பயன் பெறுகின்றன.

**முதல்அமைச்சருக்கு நன்றி**

அணையின் நீர் இருப்பு மற்றும் எதிர்வரும் பருவமழையை கருத்தில் கொண்டு 150 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும். முதல் 10 நாட்களுக்கு தொடர்ந்து தண்ணீர் திறந்து விடப்படும். பின்னர் அடுத்த 5 நாட்கள் நிறுத்தி அதன் பின்னர் நீர் வழங்கப்படும். தற்போதைய நிலவரப்படி

கெலவரப்பள்ளி அணையின் நீர்மட்டம் 38.05 அடியாகும். இடதுபுற பிரதான கால்வாயில் 62 கன அடி தண்ணீரும், வலதுபுற பிரதான கால்வாயில் 26 கன அடியும் என மொத்தம் 88 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. எனவே, விவசாயிகள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக விளைச்சல் பெருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் பயன் பெறும் வகையில் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட்ட தமிழக முதல்அமைச்சருக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் ஓசூர் உதவி கலெக்டர் பிரவீன் பி.நாயர், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் அசோக் குமார், ஓசூர் நகராட்சி தலைவர் பாலகிருஷ்ண ரெட்டி, ஓசூர் ஒன்றிய குழு தலைவர் புஷ்பா சர்வேஷ், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஜகநாதன், ஊராட்சி தலைவர்கள் சந்திரசேகர் (காமன்தொட்டி), பாலம்மா ராமச்சந்திரப்பா (கெலவரப்பள்ளி), அ.தி.மு.க. ஒன்றிய பொருளாளர் சிட்டி ஜெகதீஷ், வட்டார வளர்ச்சி அலுவலர் தமிழரசு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கலெக்டர் நேரில் ஆய்வு**

இந்த நிலையில், ஓசூரில் தொடர்ந்து ஒற்றை யானை அட்டகாசம் செய்து வருவதால் அந்த பகுதியில் உள்ள பள்ளிகளுக்கு செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இதைத்தொடர்ந்து அந்த யானையை விரட்ட வனத்துறையினர் தீவிர முயற்சி எடுத்தும் எந்த பலனும் இல்லை. ஒற்றை யானை நடமாட்டத்தால் அந்த பகுதியில் உள்ள ஒரு தனியார் பள்ளி மற்றும் மோரனப்பள்ளியில் உள்ள 2 அரசு பள்ளிகளுக்கு 2 நாட்கள் விடுமுறை விடப்பட்டன.

நேற்று அந்த பள்ளிகள் திறக்கப்பட்டது. இருந்த போதிலும் பள்ளிக்கு குறைந்த அளவிலான மாணவ, மாணவிகளே வந்தனர். இந்த நிலையில் ஓசூரில் தொடர்ந்து யானை அட்டகாசம் செய்வதால் அதை விரட்டுவது குறித்து கலெக்டர் ராஜேஷ் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். பின்னர் ஒற்றை யானை முகாமிட்டுள்ள இடத்தை கலெக்டர் நேரில் சென்று பார்வையிட்டார். அவருடன் மாவட்ட வன அலுவலர் உலகநாதன், உதவி கலெக்டர் பிரவீன் பி.நாயர், மற்றும் வனத்துறையினர் உடன் சென்றனர்.

இதன் பிறகு கலெக்டர் ராஜேஷ் நிருபர்களிடம் கூறியதாவது:

**விரட்ட நடவடிக்கை**

ஓசூரில் ஒரு வாரமாக ஒற்றை ஆண் யானை முகாமிட்டுள்ளது. அந்த யானையை வனத்துறையினர் விரட்டுகிறார்கள். வனப்பகுதி அருகில் வரை செல்லும் அந்த யானை மீண்டும் திரும்ப வந்து விடுகிறது. அதை சானமாவு காப்பு காட்டிற்கு விரட்டி, அங்கிருந்து ஊடேதுர்க்கம்

காட்டிற்கு அனுப்ப வனத்துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இரவு நேரத்தில் அந்த யானை விரட்டப்படும். பொதுமக்கள் வனத்துறைக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**பவானிசாகர் வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து மனிதசங்கிலி போராட்டம் 5 ஆயிரம் விவசாயிகள் பங்கேற்பு**

பவானிசாகர் வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்க கூடாது என்பதை வலியுறுத்தி நடந்த மனித சங்கிலி போராட்டத்தில் 5 ஆயிரம் விவசாயிகள் கலந்துகொண்டார்கள்.




<u>கான்கிரீட் தளம்</u>

பவானிசாகர் வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு விவசாயிகள் தரப்பில் எதிர்ப்பும், ஆதரவும் உள்ளது.

பவானிசாகர் வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைத்தால் கசிவு நீர் பாசனம் பாதிக்கப்படும், நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கும், விவசாயிகளுக்கு நன்மை செய்யும் உயிரினங்கள் அழியும் என்று கோரிக்கை வைத்து ஒரு தரப்பு விவசாயிகள் போராடி வருகிறார்கள்.

<u>மனித சங்கிலி போராட்டம்</u>

இந்தநிலையில் கான்கிரீட் தளம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் நேற்று கீழ்பவானி பாசன விவசாயிகள் மற்றும் பாசன நீரால் பயன்பெறும் பொதுமக்கள் மனிதசங்கிலி போராட்டம் நடத்தினார்கள்.

சத்தியமங்கலம் புதிய பஸ்நிலையத்தில், பி.எல்.சுந்தரம் எம்.எல்.ஏ. மனிதசங்கிலி போராட்டத்தை தொடங்கிவைத்தார். போராட்டத்தில் கலந்துகொண்ட விவசாயிகள் “நெல்லுக்கு பாய்வது

புல்லுக்கும் பாயட்டும், கான்கிரீட் பூசவேண்டாமே கசிவு தண்ணீர் வேண்டுமே“ என்று கோஷம் எழுப்பினார்கள்.

5 ஆயிரம் பேர்....

போராட்டத்தில், கீழ்பவானி பாசன விவசாயிகள் நலச்சங்கத்தின் தலைவர் நல்லசாமி, பவானிசாகர் பாசன பகுதி தலைவர்கள் பழனிச்சாமி, நடராஜ், ஊராட்சி தலைவர்கள் சின்னசாமி (செண்பகபுதூர்), ராம்கருணாநிதி (உக்கரம்), திலகவதி (மாக்கினாங்கோம்பை), கவிதா (இண்டியம்பாளையம்), ரமேஷ் (உத்தண்டியூர்), தங்கசாமி (அரசூர்), பால் உற்பத்தியாளர்கள் சங்க பொறுப்பாளர்கள், கூட்டுறவு வேளாண்மை சங்க பொறுப்பாளர்கள் மற்றும் செண்பகபுதூர், பெரியூர், தங்க நகர், மேட்டுக்கடை, மூலக்கிணறு பகுதியை சேர்ந்த ஆயிரம் பெண்கள் உள்பட 5 ஆயிரம் விவசாயிகள் கலந்துகொண்டார்கள். மாலை 4 மணிக்கு தொடங்கிய போராட்டம் 5 மணிக்கு முடிந்தது.

**நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் மழை நீர் சேமிப்பு விழிப்புணர்வு பிரசாரம்**

கோவை நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி பகுதிகளில் உள்ள வீடுகள், அரசு அலுவலகங்கள், பள்ளி கட்டிடங்கள், தொழிற்சாலைகளில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்த தீவிர நடவடிக் கை எடுக்கப்பட்டு வருகிறது என்று பேரூராட்சி தலைவர் ஆனந்தன் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து, நரசிம்மநாயக்கன்பாளையம் பூச்சியூர், ராக்கிபாளையம், புதுப்பாளையத்தில் உள்ள அரசு பள்ளிகள் மற்றும் தபால்நிலையம், சமுதாயகூடங்களில் 2 மீட்டர் ஆழம் 1 மீட்டர் அகலம் உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த பணிகளை பேரூராட்சி செயல் அலுவலர் குணசேகரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் பேரூராட்சி பகுதியில் உள்ள அனைத்து வீடுகளிலும் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க வேண்டும் என்று விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை அலுவலக பணியாளர்கள் வினியோகம் செய்தனர். அப்போது மழைநீரை சேகரிப்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் விளக்கி கூறினார்கள்.

**குன்னூர் தேயிலை தோட்டங்களில் உலா வரும் காட்டெருமைகள் தொழிலாளர்கள் பீதி**

குன்னூரில் காட்டெரு மைகள் தேயிலை தோட்டங்களில் உலா வருவதால் தேயிலை தோட்டதொழி லாளர் கள் மிகவும் அச் சம் அடைந்து உள்ள னர். எனவே வனத் துறை யினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்து உள் ளது.

**குடிநீர் தட்டுப்பாடு**

நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, கூடலூர், பந்தலூர் போன்ற பகுதிகளில் தென் மேற்கு பருவமழை தீவிரமாக பெய்து வருகிறது. ஆனால் குன்னூர் மற்றும் அதன் சுற் றுப்புற பகுதிகளில் மிதமான சாரல் மழை பெய்து வருகிறது. இருப்பினும் அதிகளவு மழை இல்லாத காரணத்தால் குடி நீர் ஆதாரங்கள் நிரம்ப வில்லை. இதன் காரணமாக குன்னூர் பகுதியில்அடிக்கடி குடிநீர் பிரச்சினை ஏற்பட்டு வருகிறது.

இதேப்போல் வனப்பகுதி யிலும் விலங்குகளுக்கு தேவை யான தண்ணீர் மற்றும் உணவு இல்லாத காரணத்தால் அடிக் கடி குடியிருப்பு பகுதிகள், விவசாய நிலங்கள் ஆகியவற் றில் வன விலங்குகள் புகுந்து வருகின்றன.

**காட்டெருமைகள் உலா**

குன்னூர் அருகே உள்ள சிங் காராவில் தேயிலை தோட்டம் உள்ளது. இந்த தேயிலை தோட்டம் அருகில் வனத் துறைக்குசொந்தமான காடு உள்ளது. தற்போது ஏற்பட்டு உள்ள குடிநீர் மற்றும் உணவு தட்டுப்பாடு காரணமாக காட்டெருமைகள் கூட்டம் தேயிலை தோட்டத்திற்குள் படையெடுத்து வருகின்றன.

இதன் காரணமாக தேயிலை தோட்டத்திற்குள் செல்ல தோட்ட தொழிலாளர்கள் அச்சம் அடைந்து வருகிறார் கள். இந்த பகுதி மட்டுமின்றி குன்னூர் அருகே உள்ள வெலிங்டன் அண்ணா நகர் தேயிலை தோட்ட பகுதிகளி லும் காட்டெருமைகள் கூட் டம் கூட்டமாக உலா வருகின் றன.

**பொதுமக்கள் கோரிக்கை**

தேயிலை தோட்டங்களில் காட்டெருமைகள் உலா வருவதால் தேயிலை தோட்ட தொழிலாளர்கள் மிகவும் பீதி அடைந்து உள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன்பு குன்னூரில் காட்டெருமை முட்டி முதியவர் ஒருவர் பலி யானார். இது போன்ற சம்ப வங்கள் நேராத வண்ணம் இருக்க வனத்துறை யினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

**உடுமலை பகுதியில் மழை இல்லாததால் வெண்பட்டுக்கூடு உற்பத்தி பாதியாக குறைந்தது விலை இருந்தும் உற்பத்தி இல்லாததால் விவசாயிகள் கவலை**

உடுமலை பகுதியில் மழை இல்லாததால் வெண்பட்டுக்கூடு உற்பத்தி பாதியாக குறைந்து விட்டது. தற்போது பட்டுக்கூடுக்கு விலை இருந்தும் உற்பத்தி இல்லாததால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

**வெண்பட்டு உற்பத்தி**

பட்டுக்கூடு உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. திருப்பூர் மாவட்டம் உடுமலை பகுதிகளில் சுமார் 4 ஆயிரத்து 300 ஏக்கர் பரப்பளவில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள்

பட்டுக்கூடு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகள் கோவை, பென்னகரம் மட்டுமின்றி கர்நாடக மாநிலம் ராம்நகருக்கும் கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது.

பட்டு உற்பத்திக்கு தேவையான சீதோஷ்ண நிலை உடுமலை பகுதிகளில் நிலவுவதால் ஆண்டு பயிரை பயிரிட்டு வந்த விவசாயிகள் தற்போது வெண்பட்டு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். உடுமலை பகுதிகளில் எம்.ஆர்.2, வி.1 போன்ற ரக மல்பெரி செடிகள் சாகுபடி செய்யப்படுகிறது. வி.1 ரக மல்பெரி செடிகள் நல்ல மகசூலையும், எம்.ஆர்.2 ரகம் சராசரி வளர்ச்சி, வறட்சியை தாங்கி வளர கூடியது. விவசாயிகள் முட்டை தொகுதிகள் வைத்து புழு வளர்ப்பு செய்தும், இளம் புழு வளர்ப்பு மையத்தில் இருந்து இளம் புழுக்களை விலைக்கு வாங்கியும் பட்டு கூடு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இளம் புழு பருவத்தில் புழுக்களை நோய் தாக்குவதால் விவசாயிகள் முட்டை தொகுதிகள் வாங்குவதை தவிர்த்து இளம்புழு வளர்ப்பையே பெரிதும் விரும்புகின்றனர். இளம் புழுக்களுக்கு மல்பெரி செடியின் இலைகள் சிறிதாக நறுக்கி வழங்கப்படுகிறது. புழுக்கள் தோலுரிப்பு சமயத்தில் புழுக்களின் படுக்கை மீது நீர்த்த சுண்ணாம்பு தூள் தூவி படுக்கை உலர்ந்த நிலையில் இருக்குமாறு பராமரிக்க படுகிறது.

பட்டுக்கூடு கட்டும் வரையில் 24 டிகிரி சென்டி கிரேடு வெப்பமும், 65 சதவீத ஈரப்பதமும் இருக்க வேண்டும். பட்டுப்புழுக்கள் கூடு கட்டுவதற்கு வசதியாக 'நெட்டிகா' என்ற கூடு கட்டும் வலைகளை உபயோகிக்கின்றனர். பட்டு புழுக்கள் கூடு கட்டிய 6வது நாள் கூடுகள் அறுவடை செய்யப்பட்டு பட்டுக் கூடு அங்காடிக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது உடுமலை பகுதியில் வெண்பட்டு உற்பத்தி குறித்து கண்ணமநாயக்கனூர் விவசாயி ராமகிருஷ்ணன் கூறியதாவது:

**உற்பத்தி பாதியாக குறைந்து விட்டது**

தற்போது வறட்சி காரணமாக உடுமலை பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து காணப்படுகிறது. இதனால் மல்பெரி செடிகளின் மகசூல் குறைந்து காணப்படுகிறது.

புழுக்களுக்கு உணவு பற்றாக்குறை காரணமாக மாதத்துக்கு ஒருமுறை வெண்பட்டு கூடுகள் அறுவடை செய்த நிலையில் தற்போது 2 அல்லது 3 மாதங்களுக்கு ஒரு முறை மட்டுமே அறுவடை செய்யமுடிகிறது. கடந்த ஆண்டு காலத்தில் மாதத்துக்கு 300 கிலோ வெண்பட்டுக்கூடு அறுவடை செய்தேன். ஆனால் தற்போது மாதத்துக்கு 150 கிலோ மட்டுமே அறுவடை செய்யப்படுகிறது. இந்த ஆண்டு வெண்பட்டுக்கூடு உற்பத்தியாக பாதியாக குறைந்து விட்டது.

**விற்பனை உயர்வு**

கடந்த ஆண்டு ஒரு கிலோ வெண்பட்டு கூடு ரூ.350 வரை விற்பனை ஆனது. ஆனால் தற்போது வெண்பட்டு கூடுகள் கிலோவுக்கு ரூ.420 வரை விற்பனை ஆகிறது. கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு பட்டுக்கூடு விலை உயர்ந்து உள்ள நிலையில் பட்டுக்கூடு உற்பத்தி செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். உடுமலை பகுதியில் உற்பத்தி செய்யப்படும் வெண் பட்டுக்கூடுகள் கர்நாடாக மாநிலம் ராம்நகருக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது.

உடுமலையில் இருந்து கர்நாடக மாநிலத்துக்கு வெண் பட்டுக்கூடுகள் கொண்டு செல்வதற்காக ஏற்படும் போக்குவரத்து செலவுகள் மற்றும் இதர செலவுகள் அதிகரித்து உள்ளது. மேலும் கால விரையமும் ஆகிறது. எனவே பொள்ளாச்சி, உடுமலை பகுதிகளில் பட்டுக்கூடுகள் அதிகளவு உற்பத்தி செய்யப்படுவதால் உடுமலையில் பட்டுக்கூடு மொத்த கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் உடுமலை சுற்று வட்டார பகுதி பட்டுக்கூடு விவசாயிகள் பயன் அடைவார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

**பண்ணைகுட்டைகள் அமைக்க பொதுமக்கள் முன்வர வேண்டும் கலெக்டர் பேச்சு**

பண்ணைகுட்டைகள் அமைக்க பொதுமக்கள் முன்வர வேண்டும் என கலெக்டர் முனுசாமி கூறினார்.

**<u>விழிப்புணர்வு கருத்தரங்கம்</u>**

நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நாகையில் நடைபெற்றது. கருத்தரங்கிற்கு நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி தலைமை தாங்கி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:–

ஒவ்வொரு நீர் ஆதாரத்திற்கும் அடிப்படை ஆதாரமாக அமையும் மழைநீரின் முக்கியத்துவம் குறித்தும் அதனை சேகரிக்கும் முறைகள் குறித்தும் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திட தமிழக முதல்–அமைச்சர் மழைநீர் சேகரிப்பு என்னும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறார். பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் விவசாயம், தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் தண்ணீர் அதிகமாகி வருவதால் ஆண்டுதோறும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. மேலும் பூமியில் 97 சதவீதம் கடல் நீராகவும், 3 சதவீதம் நல்ல தண்ணீராகவும் உள்ளது. இதில் இயற்கையாக நீர் தாங்கிகளில் சென்று சேரும் நீரின் அளவை விட உறிஞ்சும் நீரின் அளவு அதிகமாக உள்ளதால் குடிநீர் ஆதாரங்களை பாதுகாக்க வேண்டிய அவசியம் உள்ளது.

**<u>கடல்சார்ந்த மாவட்டம்</u>**

வீடுகளில் விழும் மழைநீரை திறந்தவெளி கிணறு, ஆழ்துளை கிணறு, உறிஞ்சி குழிகள் மூலம் சேகரிக்கலாம். இவற்றை செயல்படுத்த ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு ஏற்கனவே அரசு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக நாகை மாவட்டம் கடல்சார்ந்த மாவட்டமாக இருப்பதால் கடல்நீர் உட்புகுந்து நிலத்தடி நீர் உவர்ப்பு தன்மையாக மாறுபடுவதை தடுக்கவும், நீர் ஆவியாகாமல் அதிக அளவில் நிலத்தடிநீர் பிடிப்பான் பகுதியில் சேகரித்து நீர்மட்டம் மற்றும் தரத்தினை உயர்த்திடவும் மாவட்ட நிர்வாகம் பல்வேறு அரசு துறைகளின் வாயிலாக அனைத்து ஊராட்சிகளிலும் தடுப்பணைகள், கழிவுநீர் குட்டைகள், பள்ளத்தோடு கூடிய ஆழ்துளை கிணறுகள், ஆற்றுப்படுகையில் கதவு தடுப்பணைகள், பூமிக்கு கீழ் தடுப்பணை போன்ற கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டிற்கு மழைநீர் சேகரிப்பினை ஏற்படுத்திட பருவமழை தொடங்கும் முன்னர் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்த கருத்தரங்கம் நடைபெறுகிறது.

**<u>பண்ணைக்குட்டைகள்</u>**

இந்த முகாமில் கலந்து கொள்ளும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் இந்த செய்தினை அனைத்து மக்களுக்கும் தெரிவிப்பதோடு ஆங்காங்கே பண்ணைக் குட்டை அமைக்க முன்வரவேண்டும். இதற்காக அரசு ரூ.1½ லட்சம் மானியத்தில் நிதி உதவி வழங்கி வருகிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி பண்ணைக் குட்டைகள் அமைக்க பொதுமக்கள் முன்வர வேண்டும். அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை பின்பற்றி மழைநீர் சேகரித்து நிலத்தடி நீரை உயர்த்தி பாதுகாக்க ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் முனுசாமி கூறினார்.

கருத்தரங்கில் மழைநீர் சேகரிப்பு குறித்த தகவல் கையேட்டினை கலெக்டர் முனுசாமி அனைத்து ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும் வழங்கினார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆசியாமரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வையாளர் ரகுநாத், நிர்வாக பொறியாளர் கருணாகரன் (பொறுப்பு), கிராம குடிநீர் திட்ட உதவி நிர்வாக பொறியாளர் ரவிச்சந்திரன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்ட காவிரி தண்ணீர் திருச்சி முக்கொம்பு அணையை வந்தடைந்தது**

மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக திறந்து விடப்பட்ட காவிரி தண்ணீர் நேற்று மாலை திருச்சி முக்கொம்பு அணையை வந்தடைந்தது.

**மேட்டூர் அணை 70 அடி**

கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் சில நாட்களாக பெய்த பலத்த மழையினால் கபிணி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளில் தண்ணீர் நிரம்பியது. இதனால் அந்த அணைகளில் இருந்து மேட்டூர் அணைக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் தற்போது 70 அடியை எட்டி உள்ளது.

கர்நாடக அணைகளில் இருந்து தொடர்ந்து நீர் வரத்து அதிகரித்து வருவதால் சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் காவிரி பாசன மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் குடிநீர் தேவைக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

**முக்கொம்பு வந்தடைந்தது**

இந்த கோரிக்கையை ஏற்று மேட்டூர் அணையில் இருந்து கடந்த 5–ந் தேதி 3 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் 12–ந் தேதி கரூர் மாவட்டம் மாயனூர் தடுப்பணையை வந்தடைந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை திருச்சி மாவட்ட எல்லையான பெட்டவாய்த்தலைக்கு காவிரி தண்ணீர் வந்து சேர்ந்தது. காவல்காரப்பாளையம் வாய்க்கால் வழியாக வந்த தண்ணீர் நேற்று மாலை முக்கொம்பு அணையை அடைந்தது. அணையில் உள்ள தடுப்பணை வழியாக தண்ணீர் தற்போது வெளியேறி வருகிறது. இதனால் திருச்சி மாவட்ட விவசாயிகளும், மக்களும் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பெரம்பலூர் சிவன் கோவிலில் மழை வேண்டி சிறப்பு ஹோமம்

மழை வேண்டி பெரம்ப லூர் சிவன் கோவிலில் சிறப்புஹோமம் நடைபெற்றது.

சிவன் கோவில்

பெரம்பலூரில் உள்ள ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாள் உடனுறை பிரம்மபுரீஸ்வரர் கோவிலில் மழைவேண்டி வருணபகவான் சிறப்பு வழிபாடும், வருண ஜபஹோமமும் தர்மபரிபாலன சங்கம் சார்பில் நடந்தது. இதனை முன்னிட்டு அபிஷேக ஆராதனைகள் கலசதீர்த்தங்கள் அபிஷேகம் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து விக்னேஸ்வர பூஜை, கலச ஆவாஹனம், வருணஜபம், வருண மந்திர ஹோமங்கள், பூர்ணாகுதி, கலசதீர்த்தம் அபிஷேகம் , மகா தீபாராதனை நடந்தது. திருச்செங்கோடு சுவாமிநாத சிவாச்சாரியார் தலைமை யிலான குழுவினர் ஹோமம் மற்றும் சிறப்பு அபிஷேகத்தை நடத்திவைத்தனர்.

ஏற்பாடு

இதில் கோவில் நிர்வாக அதிகாரி ராஜேந்திரன், நகர வர்த்தகர் சங்கத்தலைவர் மற்றும் தர்மபரிபாலன சங்கத் தலைவர் பழனியாண்டி பிள்ளை, எஸ்.ஆர்.எம். ராம லிங்கம், அருணாச்சலம், குமார், முன்னாள் அறங் காவலர் வைத்தீஸ்வரன் உள்பட திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிஏற்பாடுகளை இந்துசமயஅறநிலையத்துறை உதவி ஆணையர் மற்றும் கோவில் தக்கார் கோதண்ட ராமன் தர்மபரிபாலன சங்கத் துடன் இணைந்து கோவில் நிர்வாகத்தினர் செய்திருந் தனர்.

**விவசாயத்திற்கு பயன்படுத்த வேண்டிய தொழிற்சாலைகளுக்கு உரம் விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை**

விவசாயத்திற்கு பயன்படுத்த வேண்டிய உரத்தை தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ் தெரிவித்தார்.

உரம் இருப்பு

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது. ஆனால், திண்டுக்கல் மாவட்டத்தில் குறிப்பிடும் வகையில் பருவமழை இதுவரை பெய்ய வில்லை. இருப்பினும் விவசாயத்திற்கு தேவையான உரம், விதைகள் உள்ளிட்ட இடுபொருட்கள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இதில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மற்றும் தனியார் உரக்கடைகளில் தேவையான அளவு உரம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் மொத்தம் 2,000 டன் யூரியா, 1,500 டன் டி.ஏ.பி. ஆகியவை விற்பனைக்காக தயாராக வைக்கப்பட்டு இருக்கின்றன.

தொழிற்சாலைகளுக்கு...

இது மட்டுமின்றி 2 நாட்களுக்கு முன்பு மட்டும் 228 டன் யூரியா உரம் வரவழைக்கப்பட்டது. மேலும் அடுத்தவாரம் 200 டன் உரம் வர இருப்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் தலா 4 டன்கள் உரம் வைக்கப்பட்டு உள்ளது. விவசாயிகளுக்கு தடையின்றி உரங்கள் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கிடையே யூரியா உரத்தை சிலர் மாட்டு தீவனங்கள் தயாரிக்கவும், பிளாஸ்டிக் உள்ளிட்ட தொழிற்சாலைகளில் மூல பொருட்களாக பயன்படுத்துவதாக வேளாண்மைத் துறைக்கு புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. இதனையடுத்து வேளாண்மை துறை அதிகாரிகள் மாவட்டம் முழுவதும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடும் நடவடிக்கை

எனவே, விவசாயத்திற்கு பயன்படுத்தும் உரங்களை தீவனங்கள் தயாரிக்கவோ, தொழிற்சாலைகளிலோ மூலப்பொருட்களாக பயன்படுத்துவது தெரியவந்தால் விவசாயிகள் புகார் செய்யலாம். மேலும் தொழிற்சாலைகளுக்கு உரத்தை விற்பனை செய்தோர், வாங்குபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

**கூடலூர் ஒட்டாண்குளத்திற்கு 3 ஆண்டுகளுக்கு பிறகு தண்ணீர் வரத்து விவசாயிகள் மகிழ்ச்சி**

கூடலூர் ஒட்டாண் குளத்திற்கு 3 ஆண்டு களுக்கு பிறகு நீர்வரத்து ஏற்பட்டு உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**ஒட்டாண்குளம்**

தேனி மாவட்டம், கூடலூர் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் சுரங்கனார் நீர் வீழ்ச்சி உள்ளது. மலைப் பகுதி யில் பெய்யும் மழைநீர் இங்கு நீர்வீழ்ச்சியாக கொட்டு கிறது. இந்த தண்ணீர் ஒட்டாண்குளம் என்று அழைக்கப்படும் மைத் தலை மண்ணடியான் குளத் திற்கு வந்து சேரும். இதன் மூலம் ஒட்டாண்குளம், ஈஸ் வரன் கோவில் புலம், பாரவந் தான், ஒழுகுவழி சாலை பகுதிகளில் உள்ள சுமார் 406 ஏக்கர் பரப்பளவிலான விவசாய நிலங்களில் இருபோகம் நெல் விவசாயம் நடைபெறுவது வழக்கம்.

அதுபோல் முல்லைப் பெரி யாற்றில் இருந்தும் வைரவன் வாய்க்கால் மூலம் கூட்டாறு வழியாக வினாடிக்கு 5 கன அடி வீதம் 10 மாதங்களுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு இந்த குளத்திற்கு வருகிறது. ஆண்டுதோறும் ஜூன் முதல் வாரத்தில் முல்லைப் பெரி யாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும். இந்த தண்ணீரை பயன்படுத்தி விவ சாயிகள் முதல்போக பாசனத் திற்காக நெல் விதைக்கும் பணியில் ஈடுபடுவார்கள்.

**3 ஆண்டுகளுக்கு பிறகு தண்ணீர்**

கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு சுரங்கனார் நீர்வீழ்ச்சி அருகே திடீர் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் அருவி யில் விழும் தண்ணீர் மறிக்கப் பட்டு திசைமாறி சென்றதால் குளத்திற்கு தண்ணீர் வருவது தடைபட்டது. இதன் காரணமாக இப்பகுதியில் விவசாயம் பாதிக்கப்பட்டது. ஏராளமான விளை நிலங்கள் தரிசாக மாறியது. ஒட்டாண் குளத்திற்கு தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதனை தொடர்ந்து ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் தங்கதமிழ் செல்வ னின் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.18 லட்சம் செலவில் 18ம் கால்வாய் அருகே தடுப்பு அணை கட்டப் பட்டு முல்லைப்பெரியாற்றில் இருந்து ஒட்டாண்குளத்திற்கு தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் பலனாக 3 ஆண்டு களுக்கு பிறகு தற்போது ஒட்டாண்குளத்திற்கு

தண்ணீர் வரத்து ஏற்பட்டு குளம் நிரம்பி வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து, உற்சாகத் துடன் விவசாய பணிகளை தொடங்கி உள்ளனர்.

இதற்கிடையே இந்த குளத்தின் கரைப்பகுதி திறந்த வெளி பார் ஆக மாறி வரு கிறது. கரைப்பகுதியில் ஏராள மான மதுபான பாட்டில்கள் சிதறி கிடக்கிறது. சிலர் மது பானம் அருந்திய ‘உற்சாகத்தில்’ பாட்டில்களை உடைத்து எறிகின்றனர். இதனால் உடைந்த மதுபான பாட்டில் கள் விவசாயிகளின் பாதங் களை பதம் பார்த்து வருகின் றனர். எனவே இந்த பகுதியில் மது அருந்துவதை தடுக்க போலீசார் ரோந்து பணி மேற்கொண்டு நட வடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

**சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசன கருவிகள்**

சிறு, குறு விவசாயிக ளுக்கு 100 சதவீத மானி யத்தில் சொட்டு நீர் பாசன கருவிகள் வழங் கப்பட உள்ளன.

<u>சொட்டு நீர்பாசனம்</u>

சொட்டு நீர் பாசனம் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட அளவி லான நுண்ணீர் பாசன கருத் தரங்கு நடைபெற்றது. நிகழ்ச் சியை மாவட்ட கலெக்டர் நந்தகுமார் தொடங்கி வைத் தார். தோட்டக்கலை துணை இயக்குனர் இளங்கோவன் வரவேற்றார். நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் நந்த குமார் பேசியதாவது:– இந் தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான் 100 சதவீத மானி யத்தில் சிறு, குறு விவசாயிக ளுக்கு சொட்டு நீர்பாசன கருவிகள் வழங்கப்படுகிறது.

தோட்டக்கலை பயிர்க ளான மா, நெல்லி, கொய்யா, சப்போட்டா, பப்பாளி மற் றும் வாழை போன்ற பழ மரங் களுக்கும், மிளகாய், கத்தரி, தக்காளி போன்ற காய்கறி பயிர்களுக்கும் மல்லிகை போன்ற பூச்செடிகளுக்கும், தென்னை, கரும்பு, பருத்தி, சோளம் போன்ற வேளாண்மை சார்ந்த பயிர்க ளுக்கும் சொட்டு நீர் பாசன கருவி அமைத்து விவசாயிகள் பயன்பெறலாம். சொட்டு நீர் பாசனம் செய்வதன் மூலம் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக பரப்பள வில் பயிர்கள் சாகுபடி செய் யலாம்.

<u>சிறு, குறு விவசாயிகள்</u>

மேலும் உர வகைகள், பூச்சி, பூஞ்சான மருந்துகளை சொட்டு நீர் பாசன கருவி மூலம் பயிர்களின் வேர்களுக்கு பாய்ச்சுவதன் மூலம் இடு பொருட்களின் செலவு, சாகு படி செலவு போன்றவை மிக வும் குறைவதுடன், தேவை யான நீரை பயிரின் வேர்ப் பகுதியிலேயே அளிக்க முடி யும். தேசிய நுண்ணீர் பாசன திட்டம் மூலம் சொட்டு நீர் பாசன கருவிகளுக்கு மானிய உதவி அளிக்கப்படுகிறது. தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும்

இத்திட்டத்தில் ராமநாதபு ரம் மாவட்ட விவசாயிகள் முழுமையாக பயன்பெறலாம். விவசாயிகள் மானியம் பெற தேவையான சான்றுகளை வெள்ளிக்கிழமைதோறும் தாலுகா அலுவலங்களில் பெற் றுக்கொள்ள ஏதுவாக அலுவ லர்களுக்கு அறிவுரை வழங் கப்பட்டுள்ளது. விண்ணப் பித்த ஒரு வார காலத்திற்குள் சான்று வழங்கப்படும். இவ்வாறு அவர் பேசி னார்.

விளக்கம்

நிகழ்ச்சியில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் சவுந்திர ராஜன், சொட்டு நீர்பாசன நிறுவன உழவியல் நிபுணர் செந்தில்குமார், உழவியல் துறை உதவி பேராசிரியர் துக்கையண்ணன், வேளாண் பொறியியல்துறை உதவி செயற் பொறியாளர் சண்முகம், கமுதி வட்டார முன்னோடி விவசாயி சண்முகமூர்த்தி ஆகியோர் சொட்டு நீர் பாசன திட்டம் குறித்து பேசி னர். ஏற்பாடுகளை வட்டார தோட்டக்கலை அலுவலர் பானுபிரகாஷ் செய்திருந்தார். முடிவில் தோட்டக்கலை உதவி இயக்குனர் கோவிந்த ராஜ் நன்றி கூறினார்.

**தூத்துக்குடி மீன்வளக்கல்லூரியில் மீன்பதன முறைகள் பயிற்சியில் சேர விண்ணப்பிக்கலாம்**

தூத்துக்குடி மீன்வளக்கல்லூரியில் மீன்பதன முறைகள் குறித்த பயிற்சியில் சேர விண்ணப்பிக்கலாம் என்று மீன்வளக்கல்லூரி முதல்வர் கோ.சுகுமார் தெரிவித்து உள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

பயிற்சி

தூத்துக்குடி மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம், சென்னை தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் இணைந்து தூத்துக்குடி மீன்வளக்கல்லூரியில் மீன்பதன முறைகள் மற்றும் மதிப்பூட்டும் தொழில்நுட்பங்கள் என்னும் தலைப்பில் 6 வார கால பயிற்சியை நடத்துகிறது. பயிற்சியில் மீன்பதன முறைகள், மதிப்பூட்டிய மீன் பொருட்கள் தயாரிப்பு தொழில்நுட்பங்கள், சிறு தொழில் தொடங்குவதற்கான வழிமுறைகள், முதலீட்டுக்கான வாய்ப்புகள் மற்றும் தொழில் தொடங்க வங்கி கடன் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

தகுதிகள்

இந்த பயிற்சியில் சேர 18 முதல் 35 வயதுக்கு உட்பட்டவராகவும், பிளஸ்–2 தேர்ச்சி பெற்றவராகவும் இருக்க வேண்டும். பயிற்சி பெற விருப்பம் உள்ளவர்கள் முதல்வர், மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி–8 என்ற முகவரியில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு முதல்வர் கோ.சுகுமார் தெரிவித்து உள்ளார்.

தினகரன்

**பரிந்துரைக்கப்பட்ட அளவு யூரியாவை பயன்படுத்தினால் அதிக மகசூல் பெறலாம்**

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் வேளாண்மை இயக்குனர் ராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை: விவசாயத்துக்கு தேவையான இடுபொருள் தாராளமாக கிடைப்பதற்கு டான்பெட் நிறுவனத்துக்கு வட்டியில்லா முன்பணமாக ^150 கோடியை தமிழக அரசு வழங்கியுள்ளது. அதன்படி டிஏபி உரத்தை கொள்முதல் செய்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.

இதுதவிர உரங்களின் மீதான 4% மதிப்பு கூட்டு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 50 கிலோ மூட்டை ஒன்றுக்கு ^11 முதல் ^52 வரை உரங்களின் விலை குறைந்துள் ளது. தற்போது யூரியா உரம் மிகக்குறைந்த விலையில் கிடைக்கிறது. யூரியா போன்ற தழைச்சத்து அளிக்கக்கூடிய உரத்தை பரிந்துரைக்கப்பட்ட அளவைவிட அதிக அளவில் பயன்படுத்தினால் பயிர்களின் வளர்ச்சி அதிகரித்து, பூச்சி நோய் தாக்குதலுக்கு உள்ளாகி மகசூல் குறையும். யூரியாவுடன் மணி மற்றும் சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களை தவறாமல் பயன்படுத்தவேண் டும். குருணை வடிவிலான யூரியா மற்றும் சிறிய அளவிலான யூரியா இரண்டிலும் தழைச்சத்து 46 சதம்தான் உள்ளது. எனவே, பரிந்துரைத்த யூரியா அளவை பயன்படுத்தி அதிக மகசூல் பெற விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். .

**சேலம் மாவட்டத்தில் நீர் நிலைகளை பாதுகாக்க வேண்டும் அறிவியல் இயக்கம் வலியுறுத்தல்**

சேலம், : சேலம் மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகள் மாசுபடுதலை தடுப்பதுடன், ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு அறிவியல் இயக்கம் வலியுறுத்தி உள்ளது.
தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் 11வது மாவட்ட மாநாடு, சேலத்தில் நேற்று நடந்தது. மாவட்ட தலைவர் சாம்சன் ரவீந்திரன் தலைமை வகித்தார். மாநிலத்தலைவர் மணி துவக்க உரையாற்றினார். மாவட்ட செயலாளர் ராமமூர்த்தி வேலை அறிக்கை வாசித்தார். டான்பாஸ்கோ அன்பு இல்ல இணை இயக்குநர் காபிரியேல் வாழ்த்தி பேசினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: சேலம் மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகள் மாசுபடுதலை அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். நீர்நிலை ஆக்கிரமிப்புகளையும் அகற்ற வேண்டும். சேலம் உருக்காலை விரிவாக்கத்திற்காக 2500 ஏக்கர் நிலம்

கையகப்படுத்தப்பட்டது. இதில் பல இடங்களில் நீர்நிலைகள் உள்ளன. இவற்றை ஆலை நிர்வாகம், தூர் வாரினால் சுற்றுப்புற கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்பு ஏற்படும். சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசுப்பள்ளிகளிலும் கழிப்பறை வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகளை செய்து தர மாவட்ட, உள்ளாட்சி அமைப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணவிகள் நலன் கருதி, சானிட்டரி நாப்கின் வெண்டிங் மெஷின் பொருத்துவதுடன், பயன்படுத்திய நாப்கின்களை அழிப்பதற்கான உபகரணத்தையும் பொருத்த வேண்டும். சேலம் மாநகராட்சி பகுதிகளில் பாதசாரிகளுக்கு என தனிப்பாதை வசதி இல்லை. இதனால் பாதசாரிகள் அடிக்கடி விபத்தில் சிக்குகின்றனர். போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகிறது. நடந்து செல்வோருக்கென தனி பாதை வசதியை மாநகராட்சி நிர்வாகம் செய்து தர வேண்டும். இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முன்னதாக, ஏற்காடு இளங்கோ எழுதிய, Ômனிதன் குரங்கில் இருந்துதான் பிறந்தானா?Õ என்ற நூல் வெளியிடப்பட்டது. மாவட்ட குழந்தைகள் நலக்குழும தலைவர் சேவியர் நூலை வெளியிட, மாணவர் பிரணவ் கார்த்திக் பெற்றுக்கொண்டார். அறிவியல் இயக்க நிர்வாகிகள் தில்லைக்கரசி, சத்தியமூர்த்தி, இமயபாலன், ஷாஹிரா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மக்கள் குறைதீர் நாள் கூட்டம் இரட்டை வாய்க்காலில் சாயக்கழிவு நீர் பாட்டிலில் பிடித்து வந்த விவசாயிகளால் பரபரப்பு**

கரூர், : கரூர் மக்கள் குறைதீர் நாள் கூட்டத்தில் 76 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் ஜெயந்தி வழங்கினார்.
கரூர் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று மக்கள் குறைதீர் நாள் கூட்டம் நடைபெற்றது. கலெக்டர் ஜெயந்தி தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவ லர் அருணா உட்பட அனை த்து துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.
முகாமில் இலவச வீட்டுமனைப்பட்டா, தெரு விளக்கு, அடிப்படை வசதி உட்பட பல்வேறு கோரிக்கை கள் குறித்து மக்கள் கலெக்டரிடம் மனு அளித்தனர்.
இந்த முகாமில், கரூர் நிலத்தடி நீர் பாதுகாப்பு சங்கம் மற்றும் சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்கம் ஆகிய அமைப்புகளை சேர்ந்த விவசாயிகள் சிலர் கலெக்டரிடம், கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு சின்னஆண்டாங்கோயில் பகுதியில் உள்ள இரட்டை வாய்க்காலில் சாயக்கழிவு நீர் கலந்து, தண்ணீர் கரும்பச்சை நிறத்தில் வெளியேறியது. இந்த நிலை தொடர்ந்தால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படும் என சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் தகவல் தரப்பட்டது. ஆனால், நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கூறியதோடு, சாயக்கழிவு கலப்பதால் ஏற்பட்ட நீரின் மாற்றம் குறித்தும், வாட்டர் கேனில் தண்ணீரை பிடித்து வந்து கலெக்டரிடம் காட்டினர். இதை பார்வையிட்ட கலெக்டர் தேவையான நடவடிக்கை எடுப்பதாக

விவசாயிகளிடம் தெரிவித்தார்.
நலத்திட்ட உதவிகள்: மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கோரிக்கை குறித்து வந்திருந்த பொதுமக்களிடம் மனுக்களை பெற்றுக் கொண்ட கலெக்டர் ஜெயந்தி, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி தேவையான நடவடிக்கை எடுக்க வேண் டும் என உத்தரவிட்டார். தொடர்ந்து, இந்த கூட்டத்தில், சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 16 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகைக்கான ஆணை, மாவட்ட பிற்பட்டோர் நலத்துறையின் சார்பில் 41 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் 22 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா என மொத் தம் 76 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் ஜெயந்தி வழங்கினார்.
கூட்டத்தில், சமூக பாதுகாப்புதிட்ட துணை ஆட்சியர் தெய்வேந்திரன், தனி தாசில்தார்கள் செல்வ ராஜ், சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் அம்பாயிரநாதன் உட்பட அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.
இதேபோல் கரூர் மாவட்டம் பள்ளமருதப்பட்டி காலனி பவித்திரம் கிராம மக்கள் மாவட்ட கலெக்டரிடம் தந்த மனுவில் கூறியிருப்பதாவது,
அருந்ததியர் சமூகத்தை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் இந்த பகுதியில் வசிக்கிறோம். குடியிருப்புக்கு அருகே அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலத்தில் பல ஆண்டுகளாக குப்பை கொட்டுதல் உட்பட பொதுப்பயன்பாட்டிற்காக பயன்படுத்தி வருகிறோம். குடிநீர் தேவைக்காக ஆறு மாதத்துக்கு முன்பு மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், தெருவிற்காக சிமெண்ட் நாற்காலிகள் அமைக்கப்பட்டுள்ளது. அதில், சமுதாய த்தை சேர்ந்த சிலர் அவ்வப்போது அமர்ந்து வருகிறோம். இந்நிலையில், வேறு சமூகத்தை சேர்ந்த சிலர், நாங்கள் நடந்து வரும் போது, உட்காரக்கூடாது என திட்டுகின்றனர். மேலும், சிமெண்ட் நாற்காலிகளை அப்புறப்படுத்த வேண்டும் என கூறுகின்றனர்.
இதனால், சிமெண்ட் நாற்காலிகளை வேறு இடத்துக்கு மாற்றி விட்டோம். மேலும், குடிநீர் பற்றாக்குறை குறித்து புகார் கூறினாலும் போதிய நடவடிக்கை எடுப்பதில்லை. இந்த சம்பவங்கள் குறித்தும் க.பரமத்தி காவல் நிலையத்தில் புகார் தெரிவித்துள்ளோம், எனவே மாவட்ட கலெக்டர் விசாரணை மேற்கொண்டு அடிப்படை உரிமைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

கரூர், : மாவட்ட கலெக்டர் ஜெயந்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, கரூர் மாவட்டத்தில் 2013ம் ஆண்டு ஜூலை மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் குளித்தலை ஆர்டிஓ அலுவலகத்தில் வரும் 19ம் தேதி காலை 10.30மணிக்கு

நடைபெறுகிறது. கலெக்டர் ஜெயந்தி தலைமை வகிக்கிறார். இதில் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். மாவட்ட விவசாயிகள் அனைவரும் குறைதீர்க் கும் நாள் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**விவசாயத்திற்காக நீ100 கோடி வரை கடன் வழங்க திட்டம் பாரத ஸ்டேட் வங்கி பொதுமேலாளர் தகவல்**

திருவாரூர், : விவசாயத்திற்காக ரூ.100 கோடி வரை கடன் வழங்க திட்டமிருப்பதாக பாரத ஸ்டேட் வங்கி பொது மேலாளர் கீர்த்திவாசன் தெரிவித்தார். திருவாரூர்& நாகை சாலையில் உள்ள எஸ்பி அலுவலகம் அருகே பாரத ஸ்டேட் வங்கிக் கிளை புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. மண்டல மேலாளர் கார்த்திகேயன் வரவேற்றார். தமிழ்நாடு மத்திய பல்கலை கழக துணைவேந்தர் சஞ்சய் வங்கி கிளையை திறந்து வைத்தார். வங்கி வளாகத்தில் உள்ள ஏடிஎம் மையத்தை பொது மேலாளர் கீர்த்திவாசன் திறந்து வைத்தார். திறப்பு விழாவில் மத்திய பல்கலைகழக பதிவாளர் ஸ்ரீதரன், காவிரி டெல்டா விவசாயிகள் சங்கத் தலைவர் மன்னார்குடி ரெங்கநாதன், திருவாரூர் தொழிலதிபர் பிரபாகரன் மற்றும் வங்கி வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர். வங்கி கிளை மேலாளர் மோகன்தாஸ் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பாரதஸ்டேட் வங்கி பொது மேலாளர் கீர்த்திவாசன் நிருபர்களிடம் கூறியதாவது: திருவாரூர் மாவட்டத்தில் பாரத ஸ்டேட் வங்கியின் 14 கிளைகள் செயல்பட்டு வருகின்றன. இது 15வது கிளையாகும். இந்த வங்கி கிளைகளின் மூலம் ரூ. 511 கோடி வைப்புத் தொகை பெறப்பட்டுள்ளது. ஆனால் ரூ.605 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.392 கோடி விவசாய கடன் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேட்டூர் அணை நீர்வரத்து நம்பிக்கையளிக்கும் விதமாக உள்ளது. எனவே விவசாயிகளுக்கு ஊக்கமும், நம்பிக்கையும் தரவேண்டும் என்பதற்காக மேலும் ரூ. 50 முதல் 100 கோடி வரை கடன் கொடுக்க திட்ட மிட்டுள்ளோம். அதுபோல் கல்விக்கடன் வழங்குவதிலும் எந்த கட்டுப்பாடும் இல்லை. நடப்பு ஆண்டில் இதுவரை ரூ.50 கோடி கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது. கல்விக்கடனை தாராளமாக வழங்கலாம் என்ற போதிலும் கடனை பெற்று படித்து முடித்த பட்டதாரிகள் தங்களுக்கு வேலை கிடைத்த பின்னரும் கடனை திருப்பி செலுத்தாமல் உள்ளனர். இதனால் வங்கி நிர்வாகம் பாதிக்கப்படுகிறது. எனவே கல்விக்கடனை திருப்பி செலுத்த கடன் பெற்றவர்கள் முன்வரவேண்டும். தகுதியுள்ள அனைவருக்கும் கல்விக்கடன் வழங்கப்படும். இதற்காக மேலும் ரூ.5 கோடி வரை கடன் வழங்க திட்டம் உள்ளது என்றார்.

**ஒட்டான்குளத்திற்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பால் விவசாயிகள் உற்சாகம்**

கூடலூர்: கூடலூர் ஒட்டான்குளத்துக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் விவசாயிகள் உற்சாகமடைந்துள்ளனர். கூடலூரில் ஒட்டான்குளம் என்று அழைக்கப்படும் மைத்தலை மன்னாடிகுளம் உள்ளது. கூடலூர் மேற்குத்தொடர்சி மலைஅடிவாரத்தை ஒட்டியுள்ள சுரங்கனார் அருவியிலிருந்து வரும் மழை தண்ணீரும், முல்லைப்பெரியாற்றிலிருந்து வைரவன் வாய்க்கால் மூலம் கூட்டாறு வழியாக வரும் தண்ணீரும் ஒட்டான்குளத்தை வந்தடைகிறது. கூடலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள 400 ஏக்கர் நிலங்களில் குளத்து நீரை பயன்படுத்தி பாசனம் நடக்கிறது. கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு சுரங்கனாறு அருவியிலிருந்து ஒட்டான்குளத்துக்கு தண்ணீர் வந்தது. இப்பகுதியில் மண்சரிவு ஏற்பட்டதால் ஒட்டான்குளத்திற்கு தண்ணீர் வரத்து முற்றிலும் தடைபட்டது. இதனால் கடந்த மூன்றாண்டாக இப்பகுதி விவசாயம் கேள்விக்குறியானது. மந்தை வாய்க்கால் பகுதியில் தடுப்பணை அமைத்து அங்கிருந்து ஒட்டான்குளத்திற்கு தண்ணீர் கொண்டு வர முடிவு செய்யப்பட்டது. இதற்காக ஆண்டிபட்டி எம்எல்ஏ தொகுதி மேம் பாட்டு நிதி ரூ.18 லட்சம் செலவில் பணிகள் நடந்தன.இந்நிலையில் சுரங்கனார் நீர்வீழ்ச்சியில் தண்ணீர் வரத்தொடங்கி உள்ளதாலும், இப்பகுதியில் தொடர்ந்து சாரல்மழை பெய்து வருவதாலும் ஒட்டான்குளத்துக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**அரசு திட்டங்களுக்காக விவசாய நிலங்களை கையகப்படுத்த கூடாது நல்லகண்ணு பேச்சு**

திருவில்லிபுத்தூர்: அரசின் திட்டங்களுக்காக விவசாய நிலங்களை கையகப்படுத்தக்கூடாது என இந்திய கம்யூனிஸ்ட் தேசிய கட்டுப்பாட்டுக்குழு தலைவர் ஆர்.நல்லக்கண்ணு கூறினார்.திருவில்லிபுத்தூரில் தியாகி விஸ்வநாத தாஸ் படத் திறப்புவிழா நடைபெற்றது. விழாவிற்கு மருத்துவர் உறவின்முறை தலைவர் நடராஜன் தலைமை வகித்தார். விழாவில் தென்காசி எம்பி லிங்கம், முன்னாள் எம்எல்ஏ ராமசாமி, திருவில்லிபுத்தூர் எம்எல்ஏ பொன்னுப்பாண்டியன், முன்னாள் எம்பி அழகிரிசாமி உட்பட பலர் கலந்துகொண்டனர்.இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கட்டுப்பாட்டுக்குழு தலைவர் நல்லக்கண்ணு, தியாகி விஸ்வநாததாஸ் உருவப்படத்தை திறந்து வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், ‘Ôவறட்சி நிவாரணம் பெரும்பாலானோருக்கு வழங்கப்படவில்லை. அனைவருக் கும் விரைவில் வழங்க வேண்டும். மத்திய அரசு திட்டங்களுக்கு விவசாய நிலங்களை கையகப்படுத்தக்கூடாது. இதற்கு இந்திய கம்யூனிஸ்ட் எதிர்ப்பு தெரிவிக்கிறது. தருமபுரி இளவரசன் மரணம் தொடர்பாக தனி கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. வயது வந்தவர்கள் காதலித்து கலப்பு திருமணம் செய்து கொண்டால் நாம் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். தருமபுரி போன்ற அசம்பாவிதம் தமிழகத்தில் இனி நடைபெறக்கூடாது,‘Õ என்றார்.

**விவசாய சங்க மாநாட்டு கொடியேற்று விழா**

சிதம்பரம்: கடலூரில் வரும் 24ம்தேதி முதல் 27ம்தேதி வரை அகில இந்திய விவசாயிகள் சங்க மாநாடு நடக்கிறது. இதையொட்டி மாவட்டம் முழுவதும் 33வது மாநாட்டை குறிக்கும் வகையில் 33 விவசாய சங்க கொடிகளை ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக சிதம்பரத்தில் அண்ணகுளம் அருகே கொடியேற்றும் விழா நடந்தது. மாதர் சங்கத்தலைவரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினருமான ஜான்சிராணி கலந்து கொண்டு கொடியேற்றி மாநாட்டின் நோக்கம் குறித்து பேசினார். நகர செயலாளர் ராமச்சந்திரன், மாவட்டக்குழு உறுப்பினர் வெங்கடேசன், விவசாய சங்க வட்டத்தலைவர் முகமது ஜின்னா, மாதர் சங்க ஞானமணி, சித்ரா, மல்லிகா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இது போலவே அண்ணாமலைநகர் நகர் பேரூராட்சி அருகில், கண்ணங்குடி புறவழிச்சாலை, வண்டிகேட் ஆகிய பகுதியில் கொடியேற்றும் நிகழ்ச்சி நடந்தது.

**வேளாண் நிலையத்தில் பழக்கன்றுகள் விற்பனை**

நாமக்கல், : நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் பழக்கன்றுகள், நாற்றுகள் விற்பனைக்கு உள்ளன.

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் தற்போது சாத்துக்குடி, நாரத்தை, எலுமிச்சை, நெல்லி, மாதுளை, கொய்யா, புளியன், சீமை இலந்தை, பப்பாளி, அத்தி போன்ற பழக்கன்றுகளும், தேக்கு, மலைவேம்பு, கொன்றை, பூவரசு உள்ளிட்ட மரக்கன்றுகளும் விற்பனைக்கு உள்ளது. காய்கறி விதை களான தக்காளி, புடலை, பாகல், பூசணி, பரங்கி, சிறுகீரை, தண்டுக்கீரை, செடி அவரை நாற்றுகளும் விற்பனைக்கு தயாராக உள்ளன. நடவு செய்ய விருப்பம் உள்ளவர்கள், வேளாண் அறிவியல் நிலையத்தில் அதற்குரிய தொகையை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

**அரியலூரில் 19ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

அரியலூர், : அரியலூரில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 19ம் தேதி காலை 11 மணிக்கு கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள மக்கள் குறைதீர் மன்றத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்பாசனம், கடன் உதவிகள், வேளாண் இடுபொருட்கள், இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய விவசாயிகளின் முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். அன்றையதினம் விவசாயிகள், விவசாய

பிரதிநிதிகள் குறைதீர் கூட்டத்தில் கலந்துகொண்டு வேளாண் தொடர்பான குறைகளை தெரிவிக்கலாம். இந்த தகவலை கலெக்டர் ரவிகுமார் தெரிவித்துள்ளார்.

**உணவு தானிய இயக்கத்தால் மகசூல் இடைவெளி 3 ஆண்டில் நீங்கும் வேளாண் அலுவலர் பேச்சு**

பட்டுக்கோட்டை, : பட்டுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் உணவு தானிய இயக்கம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. வேளாண் அலுவலர்கள் சாந்தி, சங்கீதா, ஜெகதீஸ்வர், உதவி வேளாண் அலுவலர்கள் ராமன், சித்ரா, ரமணி, ஜெயபாரதி, ராஜ்குமார், ரீகன், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகிதா, தொழில்நுட்ப மேலாளர்கள் ரவி, ரத்தினம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். வேளாண் அலுவலர் ராணி பேசுகையில், ‘பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்க தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள திட்டம் தான் உணவு தானிய இயக்கம். இத்திட்டத்தில் பயிர் சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளிடம் இருந்தும் பயிர் சாகுபடி விவரங்கள், விளைச்சலின் அளவு, மகசூல் இடைவெளி, மண் மாதிரிகள் சேகரித்தல் போன்றவை சேகரிக்கப்பட்டு பண்ணை மேலாண்மை பயிர்த்திட்ட வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம் மகசூல் இடைவெளியை முதல் ஆண்டில் 40 சதவீதமும், 2ம் ஆண்டில் 40 சதவீதமும், 3ம் ஆண்டில் முற்றிலுமாக நீக்குவதாகும். இதன் மூலம் வேளாண் பயிர்களுக்கு இடையேயான இடை வெளி குறைக்கப்பட்டு, உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. மண் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட மண் மாதிரிகளுக்கான மண்மாதிரி முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் இணையதளத்தில் வெளியிடப்பட்டவுடன் இந்த பரிந்துரைகளின் அடிப்படையில் விவசாயிகளுக்கு எந்த பருவத்திற்கு என்ன பயிர் செய்யலாம் மற்றும் அதற்கேற்ற ரகம், உரப்பரிந்துரைகள், பயிர் பாதுகாப்பு மருந்துகளின் அவசியம் மற்றும் பயன்பாடு ஆகிய விவரங்கள் வலைதளத்தில் இருந்து கிடைக்கப்பெறுகிறது. இந்த திட்ட விவரங்கள் ஒருங்கிணைந்த அடையாள அட்டையில் அச்சிடப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது‘ என்றார்.

**விவசாயத்தை வாழ்வியலாக மாற்ற வேண்டும் காந்திய பொருளாதார நிபுணர் வேண்டுகோள்**

மதுரை: Ôவிவசாயத்தை ஒரு தொழிலாக இல்லாமல், நம் வாழ்விய லாக மாற்றினால்தான் எதி ர்கால தலைமுறை இடர்பாடின்றி வாழ முடியும்Õ என்று காந்திய பொருளா தார நிபு ணர் குருசாமி பேசினார்.மதுரையில் தானம் அமைப்பு சார்பில் உழவர் கருத்தரங்கு நடந்தது. இதில் காந்திய பொருளாதார நிபு ணர் குருசாமி பேசியதாவது: நம் பண்டைய விவசாய முறையை மீட்டெடுக்க வே ண்டும். பருவச் சூழலுடன், பன்னாட்டுக் கம்பெனிகள், அரசுகளின் கொள்கைகள் நம்

உழவர்களை பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாக்கியுள்ளன. இதனால் விவசாய த்தை விட்டு இவர்கள் வெளி யேறும் சூழல் ஏற்பட்டுள் ளது. வேதி உரங்கள் மண் ணை பாழடித்து, உழவனின் நண் பனான மண்புழுக் களை அழித்து கொண்டிருக்கிறது. சூழல் தொகுப்பில் ஆண் டாண்டு காலமாக இயங்கிக் கொண்டிருக்கும் உயிரினச் சங்கிலியில், ஒரு கண்ணி அறுந்தாலும் அதன் விளை வுகள் கடுமை யாக இருக்கும் என்பதை காலம் உணர்த்திக் கொண்டிருக்கிறது. பாரம்பரியமாக இம்மண்ணில் முளைத்து பயன்பாட்டில் இருப்பவற் றை பிற நாடுகள் தங்களுக்கானது என காப்புரிமை பெ ற்று வருகின்றன. நமக் குள் எஞ்சிய போராட்ட உணர் வைத் தூண்டினால்தான் நம் நிலங்களாவது மிஞ்சும். விவசாயத்தை ஒரு தொ ழிலாக இல்லாமல், நம் வாழ்வியலாக மாற்றினால்தான் எதிர்காலத் தலைமுறை இடர்பாடின்றி வாழ முடியும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

சேவா அமைப்பு இயக்குநர் விவேகானந்தன் பேசு கையில், Ôஉலகின் 8 ஆயிரத்திற்கும் அதிக கால்நடை இனங்களில் 22 சதவீதம் முழுமையாக அழியும் நிலையில் இருக்கிறது. புலிக்குளம் காளை, மலை மாடு போன்ற மாட்டு இனங்களு டன், பல அரிய கால்நடை கள் அழிந்து வருகின்றன. இவற்றை காப்பது நம் கடமைÕ என்றார். இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி நிலைய இயக்கு நர் ஜெயராமன், Ôநம் நாட் டில் இருந்த 10 ஆயிரத்திற் கும் அதிக பாரம்பரிய நெல் ரகங்கள் அழிந்து விட்டன. மருத்துவ குணம், சத்துமிக்க இந்த ரகங்களில் 63 பாரம்பரிய நெல் ரகங்களே உயிர்ப்பிக்கப்பட்டுள்ளனÕ என் றார். கருத்தரங்கில் சிறுதானியங்கள், கீரைகள் நுகர் வினை மக்களிடம் அதிகரிக் கச் செய்ய வேண்டும். ஓரினப் பயிர் சாகுபடியை கைவிட்டு, பல பயிரினச் சாகுபடி முறைக்கு உழவர் கள் திரும்ப வேண்டும். வேளாண் உயிரிப்பன்மயம் குறித்த கல்வியை பள்ளிப் பாடங்களில் கொண்டு வர வேண்டும் என்பது உள்ளி ட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்ட தலை வர் பழனிச்சாமி, வயலக இயக்கத் தலைவர் வசுவலிங் கம், தானம் வயலக அறக்கட்டளை முதன்மை நிர் வாகி குருநாதன், மக்கள் தொடர்பாளர் சிவக்குமார், பஞ்சாயத்து திட்ட தலை வர் சிங்கராயர், சேவை ஒருங்கிணைப்பாளர் அழகு மலை உள்ளிட்ட பலர் பேசினர். கருத்தரங்கில் தமி ழகம், ஆந் திரா, கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்க ளில் இருந்து ஏராள மான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**ஒன்றரை ஆண்டுக்கு பின் வைகை அணை திறப்பு பாசன பணிகளில் விவசாயிகள் மும்முரம்**

மதுரை: வைகை அணை ஒன்றரை ஆண்டுகளுக்கு பிறகு இன்று திறக்கப்படுவதால் விவசாயிகள் பாசனத்திற்கு தயாராகி வருகிறார்கள். ஆனால் கூலி, உரம் விலை உயர்வு நெருக்கடியை அளித்துள்ளது.முல்லை பெரியாறு அணை ஆயக்கட்டு நிலங் கள் பெரும்பகுதி மதுரை

மாவட்டத்தில் தான் உள் ளன. கடந்த 2012-ல் தென் மேற்கு, வடகிழக்கு பருவ மழை பொய்த்ததால் இரு போகமும் விளையாமல் ஒன்றரை லட்சம் ஏக்கர் தரிசானது. இந்த ஆண்டும் பேரணை முதல் கள்ளந்திரி மதகு வரையிலான முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்குமா என்ற ஏக்கம் விவசாயிகளை வாட்டி எடுத்தது. இந்த நிலையில் தென்மேற்கு பருவமழை ஓரளவுக்கு கை கொடுத்துள்ளது. வைகை அணையில் இருந்து இன்று முதல் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.
இதற்கு முன் கடந்த நவம்பரில் பாசனத்திற்காக வைகை அணை திறக்கப்பட்டது. ஆனால் ஒன்றரை லட்சம் ஏக்கருக்கு தண்ணீர் போதாது என்பதை விவசாயிகள் கணக்கிட்டு யாரும் நடவில்லை. தண்ணீர் வீணானது.

ஒன்றரை ஆண்டுகளு க்கு பிறகு வைகை அணை பாசனத்திற்காக இன்று திறக்கப்படுவது, விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளித்துள்ளது. இதனால் விவசாயிகள் பாசனத்துக்கு தயா ராகி வருகின்றனர். சில விவசாயிகள் 10 நாட்களு க்கு முன்பே நாற்று பாவி உள்ளனர். பெரும்பாலான விவசாயிகள் கால்வாயில் தண்ணீர் வந்ததும் நாற்று பாவ தயார் நிலையில் உள்ளனர்.அணையில் 5 ஆயிரத்து 400 மில்லியன் கன அடிக்கு மேல் தண்ணீர் உள்ளது. நாற்று பாவி நடவு பணியை முடிக்க 40 நாட்கள் தொடர்ந்து தண்ணீர் திறக்கப்படும். அதன் பிறகு தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த முறை பாசனம் வைக்கப்படும். இந்த முறை முழு விளைச்சல் இருக்கும் என்ற நம்பிக்கை விவசாயிகளுக்கு உள்ளது.அதே நேரத்தில் விவசாயிகள் பல்வேறு நெருக்கடிகளையும் சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ள னர். அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டா லும், மதுரை மாவட்டத்தில் வழக்கமான மழை பெய்யாததால் கால்வாய், வயல்கள் காய்ந்து கிடக்கின்றன. எனவே தண்ணீர் அதிகம் உறிஞ்சும் என்பதால் கூடுதலாக தண்ணீர் தேவை ஏற்படும். விவசாய செலவு கள் 2011-ல் இருந்ததை விட 20 முதல் 25 சதவீதம் அதிகரித்துள்ளது.

உழவு, நடவு, களை எடுப்பு உள்ளிட்ட கூலிகளும் உரம், பூச்சி மருந்து விலைகளும் அதிகரித்துள்ளன. ஒரு ஏக்கர் நடவு பணி முடிக்க சுமார் ரூ.15 ஆயிரம், அதன் பிறகு விளையும் வரை ரூ.10 ஆயிரம் என மொத்தம் ரூ.25 ஆயிரம் செலவாகும் என விவசாயி அசோக்குமார் கூறினார். கையில் பணமில்லாத விவசாயிகள் நடவு பணியை முடிக்க வங்கிகளில் பயிர் கடன், நகை கடன் பெறுவ தில் தீவிரமாக உள்ளனர். கால்வாய்களில் அடைப்பு காவிரி கூட்டு குடிநீர் திட்டத்திற்கு குழாய் பதிக்கும் பணிக்காக வயல்களில் குழிகள் தோண்டி மூடாமல் கிடக்கின்றன. கால்வாய்களும் அடைபட்டுள்ளன. இதனால் கள்ளந்திரி, தொப்புலாம்பட்டி, மஞ்சம்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள வயல்களுக்கு தண்ணீர் வந்து சேர்வதும் கடினம் என விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

**கோடைமழை பொய்த்ததால் விவசாய பணி துவங்க தாமதம்**

தொண்டி: தொ ண்டி மற்றும் சுற்றுவட்டார த்தில் கோடைமழை பெய் யத் தவறியதால் விவசாய பணிகள் துவங்குவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. ராமநாதபுரம் மாவட்ட த்தின் நெற்களஞ்சியம் என அழைக்கப்படுவது திரு வாடானை தாலுகா. இங்கு சுமார் 24 ஆயிரம் ஹெக் டேர் நிலப்பரப்பில் நெல் விவசாயம் நடைபெற்று வருகிறது. அதிக மகசூலை கொடுக்கக் கூடிய தொண்டி பிர்க்காவில் உள்ள அனை த்து கண்மாய்களும் தற் போது வறண்ட நிலையில் உள்ளது. இந்த மாதத்தில் பெய் யும் கோடை மழையையொட்டி வயல்களில் உழவு பணியை மேற்கொள்வது வழக்கம். இம்முறை கோ டை மழை பெய்யாததால் விவசாயிகள் ஏமாற்றத்தில் உள்ளனர். வானம் பார்த்த பூமியான இப்பகுதியில் கோடை மழை பெய்யத் தவறினால் விவசாய பணி கள் பாதிக்கும் அபாயம் உள்ளது. இதுகுறித்து முகிழ்தகத்தைச் சேர்ந்த விவசாயி முருகேசன் கூறுகையில், Ômமழைநீரை மட்டுமே நம்பி இப் பகுதியில் விவசாயம் நடைபெற்று வருகிறது. முன்பெல்லாம் நெற்பயிர் விவசாயம் தவிர எள், மிளகாய் உட்பட பல்வேறு விவசாயம் நடைபெற்றது. ஆனால் தற்போது நெல் விவசாயம் பார்ப்பதே அரிதாகிவிட்டது. ஆனி மற்றும் ஆடி மாதத்தில் கோடை மழை பெய்தால் வயல்களை உழுது போட் டால் விவசாயத்திற்கு ஏற்ற தாக இருககும். தற்போது ஒருமுறை கூட மழை பெய்யாததால் விவசாயப் பணி யை துவங்க முடியாமல் உள்ளோம்Õ என்றார்.

**அணைக்கட்டு பகுதியில் மணிலா, சோளம் விதைப்பு மும்முரம்**

வேலூர் மாவட்டத்தில் நீண்ட நாட்களாக மழையில்லாததால் விவசாயிகள் பயிர்செய்யாமல் வேதனையில் இருந்தனர். இதனிடையில் அணைக்கட்டு, குடியாத்தம், வேலூர் உள்ளிட்ட பல இடங்களில் கடந்த சில நாட்களாக அடுத்தடுத்து தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதையடுத்து விவசாயிகள் மணிலா, சோளம், கேழ்வரகு, கம்பு, துவரை, மொச்சை, அவரை உள்ளிட்ட மானாவரி பயிர்கள் விதைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

**ஆந்திராவில் தொடர் மழையால் வேர்க்கடலை விதைக்க முடியாமல் ராயல சீமா விவசாயிகள் அவதி**

திருப்பதி, :ஆந்திராவில் பெய்து வரும் தொடர் மழையால் ராயலசீமா விவசாயிகள் நிலங்களில் வேர்க்கடலை விதைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆந்திர மாநிலத்தில் கடந்த 3 நாட்களாக பரவலாக தொடர் மழை பெய்து வருகிறது. ராயல சீமாவிலும் நல்ல மழை பெய்து வருகிறது. இந்நிலையில், ராயலசீமா பகுதியில் உள்ள சித்தூர், அனந்தபூர், கர்னூல், கடப்பா மாவட்டங்களில் விவசாயிகள் அதிகமாக வேர்க்கடலையை சாகுபடி செய்து வருகின்றனர்.

மே மாதம் முதல் ஜூலை மாதம் இறுதி வரை மழை பெய்ததும் வேர்க்கடலை விதைகளை நிலங்களில் விதைப்பது வழக்கம். இந்த ஆண்டு ஜூன் மாத இறுதி வரை மழை பெய்யாததால், 90 சதவீத விவசாயிகள் தங்களது நிலங்களில் வேர்க்கடலை விதைக்கவில்லை. இந்நிலையில், கடந்த 3 நாட்களாக தொடர் மழை பெய்தாலும், விவசாயிகள் வேர்க்கடலை விதை விதைக்க ஆர்வம் காட்டவில்லை. கடந்த 13 நாட்களில் 64,300 ஹெக்டர் பரப்பளவில் மட்டுமே வேர்க்கடலை விதைக்கப்பட்டுள்ளது.

ராயலசீமா பகுதியில் 4 மாவட்டங்களில் 12.62 லட்சம் ஹெக்டர் நிலத்தில் வேர்க்கடலை சாகுபடி செய்கின்றனர். ஆனால் இந்தாண்டு ஜூன் 30ம் தேதி வரை 1 லட்சத்து 10 ஆயிரத்து 238 ஹெக்டரில் வேர்க்கடலை விதைக்கப்பட்டது. ஜூலை 1ம் தேதி முதல் 13ம் தேதி வரை 60 ஆயிரத்து 298 ஹெக்டரில் மட்டுமே வேர்க்கடலை விதைக்கப்பட்டது. தற்போது வரை 1 லட்சத்து 70 ஆயிரத்து 536 ஹெக்டர் நிலத்தில் வேர்க்கடலை விதைகள் விதைக்கப்பட்டுள்ளது. ஆனால் சுமார் 10 லட்சம் ஹெக்டருக்கு மேற்பட்ட நிலங்களில் வேர்க்கடலை விதைக்கப்படவில்லை.

சித்தூர் மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் 1.60 லட்சம் ஹெக்டர் நிலத்தில் வேர்க்கடலை பயிரிடுவது வழக்கம். ஆனால் இந்தாண்டு ஜூன் 30ம் தேதி வரை 67 ஆயிரம் ஹெக்டர் நிலங்களில் மட்டுமே வேர்க்கடலை விதைக்கப்பட்டுள்ளது.

அனந்தபூர் மாவட்டத்தில் ஜூலை மாதத்தில் சாதாரணமாக 67 மி.மீட்டர் மழை பெய்யும். ஆனால் தற்போது வரை 20.3 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. இதனால் ஏராளமான விவசாயிகள் வேர்க்கடலை விதைக்கவில்லை. ஆனால் மாவட்டத்தில் உள்ள கதிரி, புக்காபட்டினம், நார்பலா, வஜ்ஜிரகரூர் ஆகிய பகுதிகளில் மட்டுமே சில விவசாயிகள் வேர்க்கடலை விதைத்துள்ளனர். இதனால் குறைவான அளவில் வேர்க்கடலை சாகுபடி நடந்துவருகிறது.

கர்னூல் மாவட்டத்தில் ஜூலை மாதத்தில் 117 மி.மீட்டர் பெய்யும். ஆனால் தற்போது வரை 70.7 மி.மீட்டர் மழை அதிகமாக பெய்தாலும், ஏராளமான விவசாயிகள் வேர்க்கடலை விதைக்க ஆர்வம் காட்டவில்லை. இந்த மாவட்டத்தில் பருத்தி சாகுபடிக்கு விதை விதைப்பதாக தெரிய வந்துள்ளது.

கடப்பா மாவட்டத்தில் ஜூலை மாதத்தில் 66.7 மி.மீட்டர் பெய்யும். ஆனால் தற்போது வரை 37.1 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. 1.12 லட்சம் ஹெக்டரில் சாதாரணமாக வேர்க்கடலை சாகுபடி செய்வது வழக்கம். ஆனால் இந்தாண்டு 1536 ஹெக்டர் நிலங்களில் மட்டுமே விவசாயிகள் வேர்க்கடலை விதைத்துள்ளனர்.

இந்நிலையில், கடப்பா சரக விவசாயத்துறை இணை இயக்குனர் நரசிம்மலு வெளியிட்ட அறிக்கையில், இந்த ஆண்டு ஜூலை மாதம் வரை மழை தொடரும் என்பதால், இம்மாதம்

முழுவதும் வேர்க்கடலை விதைகளை விதைக்கலாம் என தெரிவித்துள்ளார்.
பாக்ஸ்

நிலங்களில் வேர்க்கடலை விதைப்பதற்கான விவரம் ஹெக்டரில்.

| மாவட்டம் | சாதாரணமாக | ஜூன் 30 வரை | ஜூலை 1&13 | மொத்தம் |
|---|---|---|---|---|
| சித்தூர் | 1.60 லட்சம் | 67000 | & | 67000 |
| அனந்தபூர் | 8.10 லட்சம் | 31000 | 21000 | 52000 |
| கர்னூல் | 1.80 லட்சம் | 11002 | 38998 | 50000 |
| கடப்பா | 1.12 லட்சம் | 1236 | 300 | 1536 |

இந்த 4 மாவட்டங்களில் மொத்தம் 12.60 லட்சம் ஹெக்டரில் வேர்க்கடலை விதைத்திருக்க வேண்டும். ஆனால் இந்தாண்டு ஜூன் 30 வரை 1 லட்சத்து 10 ஆயிரத்து 638 ஹெக்டரிலும், ஜூலை 13ம் தேதி வரை 60 ஆயிரத்து 298 ஹெக்டரிலும் என மொத்தம் 1 லட்சத்து 70ஆயிரத்து 536 ஹெக்டர் நிலங்களில் மிகக்குறைவாக வேர்க்கடலை விதைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆந்திர இறால்களுக்கு வெளிநாடுகளில் கடும் கிராக்கி**

சித்தூர், :

ஆந்திர இறால்களுக்கு வெளிநாடுகளில் கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இந்திய இறால்களுக்கு வெளிநாடுகளில் மவுசு ஏற்பட்டுள்ளதால், மீன்கள் மற்றும் இறால் வகைகள் பல கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இதில் குறிப்பாக உயர்ரக இறால்களான பனாமி, டைகர் ரக இறால்கள் அதிகபட்சமாக ஆந்திர மாநிலத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.
விசாகப்பட்டினம், குண்டூர், நெல்லூர், கிழக்கு மற்றும் மேற்கு கோதாவரி மாவட்டங்களில் இறால் உற்பத்தி பண்ணைகள் உள்ளன. இங்கிருந்து கடந்த 2011&12ம் ஆண்டில் 8 லட்சத்து 62 ஆயிரத்து 021 டன் இறால்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது. அதன்படி ரூ.16ஆயிரத்து 597 கோடி வருவாய் கிடைத்தது. இதனை தொடர்ந்து கடந்த 2012&13 ஆண்டில் 9 லட்சத்து 28ஆயிரத்து 215 டன் இறால்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு, ரூ.18 ஆயிரத்து 856 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இதனால் இந்த 2013&14 வருவாய் ஆண்டில் மேலும் வருவாய் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டிலேயே ஆண்டுக்கு 2 லட்சம் டன் வரை இறால் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதில் 1.50 லட்சம் டன் ஆந்திர மாநிலத்தில் இருந்து மட்டுமே

ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போது தென் ஆசிய நாடுகள் மட்டுமின்றி அமெரிக்கா, ஜப்பான், சீனா மற்றும் பல நாடுகளில் இந்த வகை இறால்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால் ஆந்திர அரசு ஏற்றுமதியை பெருக்க திட்டமிட்டு வருகிறது.

**உளுந்தூர்பேட்டை பகுதியில் வெண்டைக்காய் பயிரில் இலைசுருட்டு நோய் தாக்குதல்**

உளுந்தூர்பேட்டை: விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள வண்டிப் பாளையம், சின்னக்குப்பம், சேந்தநாடு, பாதூர், புகைப்பட்டி, எறையூர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் அதிக அளவு தோட்டக்கலை பயிரான வெண்டைக்காய் செடியினை விவ சாயிகள் பயிரிட்டு வருகின்றனர்.

இந்த கிராமங்களில் இருந்து அறுவடை செய்யப்படும் வெண்டைக்காயினை சென்னை கோயம்பேடு, சேலம், கோயம்புத்தூர், கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட மார்க்கெட் பகுதிக்கு விவசாயிகள் மொத்த மாக விற் பனை செய்து வருகின்ற னர். பருவ மழை பொய்த்து போன நிலையில் தற்போது பயிரிடப்பட்டுள்ள வெண்டைக்காய் செடியில் இலை சுருட்டுப்புழு மற்றும் செம்பியான் எனப்படும் நோய் தாக்குதல் அதிக அளவு உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர். இந்த நோய் தாக்குதலால் செடியின் வளர்ச்சி குறைவாக இருப்பதுடன், செடியின் குருத்து பகுதி வளைந்து செடியின் வளர்ச்சி மற்றும் பூ வைப் பதை தடுக்கிறது. மேலும் வெண்டைக்காய் வளைந்து புள்ளி விழுவதால் இதனை வியாபாரிகள் வாங்க மறுக்கின்றனர். இதனால் அறு வடை செய்யப்படும் வெண்டைக்காயில் பாதி அளவிற்கு இந்த நோய் தாக்குதல் உள்ளது. இதன் காரணமாக வெண்டைக் காய் பயிரிட்டுள்ள விவசாயிகள் கடுமை யாக பாதிக்கப்பட்டுள்ளனர். அரசு மானிய விலை யில் வழங்கும் நோய் தடுப்பு மருந்துகளை பயன்படுத்தினாலும் எவ்வித பயனும் இல்லை. இதனால் தனியார் கடை களில் அதிக விலை கொடுத்து நோய் தடுப்பு மருந்துகளை வாங்க வேண்டிய நிலை உள்ளது. ஆனால் தற்போது ஒரு கிலோ வெண்டைக்காய் ரூ 10 முதல் ரூ 12 வரையில் மட்டுமே விலை போகிறது என விவசாயிகள் கூறுகின்றனர். உளுந்தூர்பேட்டை பகுதியில் பயிரிடப்பட்டுள்ள வெண்டைக்காய் செடியில் தாக்கியுள்ள இலைசுருட்டு மற்றும் செம்பியான் நோயினை கட்டுப்படுத்த தரமான மருந்து களை வேளாண்மை துறை மற்றும் தோட்டக் கலை துறையின் சார்பில் வழங்க வேண்டும் என்றும் வெண்டைக்காய் பயிரிட்டு பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்க வேண்டும் என உளுந்தூர்பேட்டை பகுதி விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

**அரூர் சாலையோர கடைகளில் மாதுளம்பழம் விற்பனை ஜோர்**

அரூர், : அரூரில் சாலையோர கடைகளில், மாதுளம் பழம் விற்பனை ஜோராக நடக்கிறது. விலை குறைவாக இருப்பதால், இதை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

தமிழகத்திற்கு மகாராஷ்டிரா, கர்நாடகா மாநிலங்களிலிருந்து மாதுளம் பழங்கள், விற்பனைக்கு வரத் துவங்கியுள்ளது. இதையடுத்து, அரூர் சாலையோரங்களிலும், தள்ளுவண்டிகளிலும் மாதுளம்பழங்கள் விற்பனை செய்யப்படுகிறது. சர்க்கரை நோயாளிகள், கர்ப்பிணி பெண்கள் உள்பட அனைத்து தரப்பினருக்கும் ஏற்றது என்பதாலும், மாதுளம் பழங்களை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச்செல்கின்றனர்.
தற்போது வரத்து அதிகரித்திருப்பதால், சாலையோர கடைகளில் மாதுளம் பழ விலை குறைவாக உள்ளது. ஒரு கிலோ ரூ.90 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால், அரூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் சாலையோர கடைகளில் மாதுளம் பழ விற்பனை படுஜோராக நடைபெற்று வருகிறது. மக்களும் அதிக அளவில் மாதுளை வாங்கி செல்கின்றனர்.

**காரைக்குடி பகுதியில் மழையின்றி காய்ந்த நார்த்தங்காய் மரங்கள் விறகாய் பயன்படும் அவலம்**

காரைக்குடி: காரைக்குடி பகுதியில் மழையின்றி நார்த்தங்காய் மரங்கள் காய்ந்து வருகின்றன. இதனால் இப்பகுதி மக்கள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.
காரைக்குடி பகுதியில் பெத்தாச்சி குடியிருப்பு, கருநாவல்குடி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நார்த்தங்காய் மரங்கள் அதிகளவில் உள்ளன. வயல் ஓரங்கள் மற்றும் வீட்டுக் கொல்லைகளில் இந்த மரங்களை இப்பகுதி மக்கள் வளர்த்து வருகின்றனர். விளைந்த காய்களை ஊறுகாய், நார்த்தங்காய் ஜூஸ் போடுவதற்காக விற்று வருகின்றனர். கடந்த ஆண்டு போதிய மழை இல்லாதது, நிலத்தடி நீர் மட்டம் குறைந்தது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் நார்த்தங்காய் மரங்கள் காய்த்த நிலையிலே காய்ந்து விட்டன. இதனால் வேறு வழியின்றி இப்பகுதி மக்கள் மரங்களை வெட்டி விறகுகளாக பயன்படுத்தி வருகின்றனர். இதுகுறித்து விவசாயி மூர்த்தி கூறுகையில், 'எங்கள் பகுதியில் நார்த்தங்காய் மரங்கள் அதிகளவில் உள்ளன. மற்ற விவசாய பயிர்களைப் போலத்தான் இந்த மரங்களையும் பராமரித்து வந்தோம். அடிக்கடி தண்ணீர் பாய்ச்சி பராமரித்து வந்தோம். சீசன் நேரத்தில் நல்ல காய்ப்பு இருந்தால் ஒரு மரம் மூலம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.8 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரை கிடைக்கும். விவசாயம் கைவிட்டாலும் இதன் மூலம் எங்களுக்கு ஓரளவு வருமானம் கிடைத்து வந்தது. 10 ஆண்டுகளை தாண்டி பலன் தந்த மரங்கள் காய்ந்துபோய் விட்டதால் அனைத்தையும் வெட்டி விறகாக்கி விட்டோம்' என்றார்.

**பரிந்துரைக்கப்பட்ட அளவு யூரியாவை பயன்படுத்தினால் அதிக மகசூல் பெறலாம்**

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் வேளாண்மை இயக்குனர் ராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை: விவசாயத்துக்கு தேவையான இடுபொருள் தாராளமாக கிடைப்பதற்கு டான்பெட் நிறுவனத்துக்கு வட்டியில்லா முன்பணமாக ^150 கோடியை தமிழக அரசு வழங்கியுள்ளது. அதன்படி டிஏபி உரத்தை கொள்முதல் செய்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.

இதுதவிர உரங்களின் மீதான 4% மதிப்பு கூட்டு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 50 கிலோ மூட்டை ஒன்றுக்கு ^11 முதல் ^52 வரை உரங்களின் விலை குறைந்துள் ளது. தற்போது யூரியா உரம் மிகக்குறைந்த விலையில் கிடைக்கிறது. யூரியா போன்ற தழைச்சத்து அளிக்கக்கூடிய உரத்தை பரிந்துரைக்கப்பட்ட அளவைவிட அதிக அளவில் பயன்படுத்தினால் பயிர்களின் வளர்ச்சி அதிகரித்து, பூச்சி நோய் தாக்குதலுக்கு உள்ளாகி மகசூல் குறையும். யூரியாவுடன் மணி மற்றும் சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களை தவறாமல் பயன்படுத்தவேண் டும். குருணை வடிவிலான யூரியா மற்றும் சிறிய அளவிலான யூரியா இரண்டிலும் தழைச்சத்து 46 சதம்தான் உள்ளது. எனவே, பரிந்துரைத்த யூரியா அளவை பயன்படுத்தி அதிக மகசூல் பெற விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். .

**இரட்டிப்பு மகசூலுக்கு திருந்திய நெல் சாகுபடி விவசாயிகளுக்கு வேளாண் அலுவலர் அறிவுறுத்தல்**

கிருஷ்ணகிரி: இரட்டிப்பு மகசூலுக்கு திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிர் செய்யலாம் என கிருஷ்ணகிரி உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் (பொ) பச்சையப்பன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:
கர்நாடகாவில் பருவமழை நன்றாக பெய்துள்ளதால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கெலவரப்பள்ளி அணை, கிருஷ்ணகிரி அணை மற்றும் பாரூர் பெரிய ஏரி ஆகியவை நிரம்பும் தருவாயை எட்டி, தற்போது பாசனத்திற்கு திறந்து விடப்பட உள்ளது. ஆடிப்பட்டத்திற்கு தேவையான முக்கிய நெல் ரகங்களான ஜிலகரபொன்னி, பொன்னி, வெள்ளை பொன்னி, ஏடீடி 38, பையூர் 1 போன்றவைகளை பயன்படுத்தி, ஏக்கருக்கு 3 கிலோ விதை வீதம் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்து, அதிக விளைச்சல் பெற்று பயனடையலாம்.
திருந்திய நெல் சாகுபடி முறையில், நெல் விதைப்பதற்கு முன் நாற்றங்கால் பகுதி தயாரிப்பு மிகவும் முக்கியம். ஒரு ஏக்கருக்கு தேவையான 3 சென்ட் பரப்பளவில் பாலித்தீன் விரிப்புகளை பரப்பிவிட்டு, அதில் 70 சதவீதம் மண்ணும், 20 சதவீதம் நன்கு மக்கிய தொழு உரமும், 10 சதவீதம் நெல் உமி மற்றும் 2 கிலோ 17:17:17 என்பிகே அல்லது 1.5 கிலோ டிஏபி பவுடரும் கலக்க வேண்டும்.
அதன் பிறகு 2 பாக்கெட் அசோஸ்பைரில்லம் மற்றும் 2 பாக்கெட் பாஸ்போ பாக்டீரியாவில் விதை நேர்த்தி செய்யப்பட்டு 4 மணி நேரம் உலர வைத்து, 24 மணி நேரம் தண்ணீரில் ஊர வைத்து முளைப்புத்திறன் உளள விதைகளை நாற்றங்காலில் விதைக்க வேண்டும். நாற்றங்காலுக்கு பூந்தொட்டி ஒரு நாளைக்கு 2 அல்லது 3 முறை தண்ணீர் விட வேண்டும். 14,15 நாட்கள் வயதான நாற்றுகள், வயலில் நடவுக்கு மிகவும் உகந்ததாகும். நாற்றுக்களை பிடுங்குவதற்கு 2 நாட்களுக்கு முன்னரே தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்த வேண்டும். இறுகிய

மண்ணாக இருந்தால் 5 கிலோ ஜிப்சம் இட்டு நாற்றுக்களை பிடுங்கி நடவு செய்ய வேண்டும். நன்கு உழவு செய்து சமப்படுத்தப்பட்ட வயலில் 23க்கு 23 செ.மீ இடைவெளியில் நாற்றுக்களை சதுர வடிவ முறையில், இடத்திற்கு 1,2 நாற்றுக்களை நடவு செய்ய வேண்டும். நட்ட 7 முதல் 10 நாட்களில் விடுபட்ட இடங்களை நிரப்ப வேண்டும். நீர் வடிய விட்டு நீர் கட்டுதல் (பூப்பதற்கு முன் வரை) மிகவும் முக்கியம். களையை கட்டுப்படுத்த நட்ட 10,15வது நாளிலிருந்து 10 நாட்களுக்கு ஒரு முறை கோனோவீடர் கருவியைக் கொண்டு மொத்தம் 4 முறை களையெடுக்க வேண்டும். நமது மாவட்டத்தில் நெல்லுக்கு தேவையான உரமானது அரசு நிர்ணயிக்கப்பட்ட 60:20:20 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து என்ற அளவில் கொடுக்க வேண்டும். மணிச்சத்து அடியுரமாகவும், தழை மற்றும் சாம்பல்சத்து மூன்று தருணங்களில் பிரித்தும் அளிப்பது பயிருக்கு மிகவும் நல்லது. மேலும் இலை வண்ண அட்டையை கொண்டும் தழைச்சத்து அளிக்கலாம். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செய்து ஆரோக்கியமான சூழலில் பயிர்களை வளர்த்து மகசூலை அதிகரிக்க வேண்டும். இந்த முறையில் சாகுபடி மேற்கொள்ளும் போது சாதாரண முறையில் பெறப்படும் மகசூலைவிட ஒன்றரை மடங்கு, அதாவது ஹெக்டேருக்கு 9 முதல் 11 டன் வரை மகசூல் பெற வாய்ப்புள்ளது. இவ்வாறு வேளாண்மை துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**வறட்சியால் விளைச்சல் பாதிப்பு வெற்றிலைக்கு விலை கிடைக்கவில்லை விவசாயிகள் வேதனை**

கரூர் : வெற்றிலைக்கு போதுமான விலை கிடைக்காததால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

கரூர் வட்டாரத்தில் புக ழூர், புங்கோடை, சேமங்கி, முத்தனூர், பாலத்துறை உள்ளிட்ட பகுதிகளில் வெற்றிலை சாகுபடி ஆயிரக்கணக்கான ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு வரு கிறது. வெற்றிலை கொடிக்கால்களுக்கு காவிரி ஆற்று நீர் பாசன ஆதாரமாக உள்ளது. புகழூர் பகுதி மற் றும் கரூர் வட்டார பகுதிகளில் உள்ள கிராமங்களில் விளையும் வெற்றிலைகள் வேலாயுதம்பாளையம் வெற்றிலை மண்டிக்கும், வேலூரில் உள்ள தினசரி வெற்றிலை ஏல மார்க்கெட்டிற்கும் விற்பனைக் காக அனுப்பி வைக்கப் பட்டு வருகின்றன. இந்த மண்டிகளுக்கு காட்டுப்புத்தூர், மோகனூர், பர மத்தி போன்ற நாமக்கல் மாவட்ட விவசாயிகளும் விற்பனைக்காக வெற்றிலை கொண்டு வருகின்றனர்.

இங்கு நடைபெறுகின்ற வெற்றிலை ஏலத்தில் கலந்துகொள்வதற்காக கரூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை போன்ற ஊர்களில் இந்து மெத்த வியாபாரிகள் வந்து ஏலம் எடுக்கின்றனர். வறட்சி காரணமாக வெற்றிலை விளைச்சல் குறைந்து விட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். காவிரி ஆற்றுப்பாசனத் தில் அக்கரையில் நாமக்கல் மாவட்டம், இக்கரையில் கரூர் மாவட்டம் தண்ணீர்பெறுகின்றன. ஆற்றில் தொடர்ந்து தண்ணீர் வந்த போது ஆயிரக்கணக்கில் கரூர் வட்டாரத்தில் வெற் றிலை சாகுபடி நடைபெற் றது. தற்போது நூற்றுக்கணக்கான ஏக்கராக சாகு படி பரப்பு குறைந்துவிட் டது. எனினும் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக வெற்றிலை தரமாக

விளையாததால் நல்ல விலை கிடைக்கவில்லை.

விவசாயி ராமசாமி கூறுகையில், வறட்சி, ஆள்பற்றாக்குறை போன்றவற்றை சமாளித்து கடும் சிரமத்திற்கு மத்தியில் வெற்றிலையை பறித்து விற்பனைக்கு கொண்டு சென் றால் போது மான விலை கிடைக்கவில்லை. வெள்ளைக்கொடி இளங்கால் ரக வெற்றிலை 104 கவுளி கொண்ட ஒரு சுமை 2 ஆண்டுக்கு முன்னர் ரூ.6 ஆயிரத்திற்கு ஏலம்போனது. கடந்த சில மாத ங்களுக்கு முன்னர் ரூ.4500 ஆக குறைந்தது. தற்போது மேலும் விலை சரிவடைந்து ரூ.1300 க்குத்தான் விலை போகிறது. பிற ரக வெற்றிலைகளுக்கு ரூ.1500 தான் விலை கிடைக்கிறது. காவிரி தண்ணீரை பாசனத்திற்கு விடும்போது வெற்றிலை கொடிக்கால் வாய்க்கால் பகுதிக்கும் தண்ணீர் சென்றடையு மாறு திறந்து விடவேண் டும் என்றார்.

**வறட்சியால் விளைச்சல் பாதிப்பு வெற்றிலைக்கு விலை கிடைக்கவில்லை விவசாயிகள் வேதனை**

கரூர் : வெற்றிலைக்கு போதுமான விலை கிடைக்காததால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

கரூர் வட்டாரத்தில் புக ழூர், புங்கோடை, சேமங்கி, முத்தனூர், பாலத்துறை உள்ளிட்ட பகுதிகளில் வெற்றிலை சாகுபடி ஆயிரக்கணக்கான ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு வரு கிறது. வெற்றிலை கொடிக்கால்களுக்கு காவிரி ஆற்று நீர் பாசன ஆதாரமாக உள்ளது. புகழூர் பகுதி மற் றும் கரூர் வட்டார பகுதிகளில் உள்ள கிராமங்களில் விளையும் வெற்றிலைகள் வேலாயுதம்பாளையம் வெற்றிலை மண்டிக்கும், வேலூரில் உள்ள தினசரி வெற்றிலை ஏல மார்க்கெட்டிற்கும் விற்பனைக் காக அனுப்பி வைக்கப் பட்டு வருகின்றன. இந்த மண்டிகளுக்கு காட்டுப்புத்தூர், மோகனூர், பர மத்தி போன்ற நாமக்கல் மாவட்ட விவசாயிகளும் விற்பனைக்காக வெற்றிலை கொண்டு வருகின்றனர்.

இங்கு நடைபெறுகின்ற வெற்றிலை ஏலத்தில் கலந்துகொள்வதற்காக கரூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை போன்ற ஊர்களில் இந்து மெத்த வியாபாரிகள் வந்து ஏலம் எடுக்கின்றனர். வறட்சி காரணமாக வெற்றிலை விளைச்சல் குறைந்து விட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். காவிரி ஆற்றுப்பாசனத் தில் அக்கரையில் நாமக்கல் மாவட்டம், இக்கரையில் கரூர் மாவட்டம் தண்ணீர்பெறுகின்றன. ஆற்றில் தொடர்ந்து தண்ணீர் வந்த போது ஆயிரக்கணக்கில் கரூர் வட்டாரத்தில் வெற் றிலை சாகுபடி நடைபெற் றது. தற்போது நூற்றுக்கணக்கான ஏக்கராக சாகு படி பரப்பு குறைந்துவிட் டது. எனினும் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக வெற்றிலை தரமாக விளையாததால் நல்ல விலை கிடைக்கவில்லை.

விவசாயி ராமசாமி கூறுகையில், வறட்சி, ஆள்பற்றாக்குறை போன்றவற்றை சமாளித்து கடும் சிரமத்திற்கு மத்தியில் வெற்றிலையை பறித்து விற்பனைக்கு கொண்டு சென் றால் போது மான விலை கிடைக்கவில்லை. வெள்ளைக்கொடி இளங்கால் ரக வெற்றிலை 104 கவுளி கொண்ட ஒரு சுமை 2 ஆண்டுக்கு முன்னர் ரூ.6 ஆயிரத்திற்கு ஏலம்போனது. கடந்த சில மாத ங்களுக்கு முன்னர்

ரூ.4500 ஆக குறைந்தது. தற்போது மேலும் விலை சரிவடைந்து ரூ.1300 க்குத்தான் விலை போகிறது. பிற ரக வெற்றிலைகளுக்கு ரூ.1500 தான் விலை கிடைக்கிறது. காவிரி தண்ணீரை பாசனத்திற்கு விடும்போது வெற்றிலை கொடிக்கால் வாய்க்கால் பகுதிக்கும் தண்ணீர் சென்றடையு மாறு திறந்து விடவேண் டும் என்றார்.

**பஜன்கோ வேளாண் கல்லூரி வளாகத்தில் ராகி சாகுபடி**

காரைக்கால், : காரைக்கால் பஜன்கோ வேளாண் கல்லூரி வளாகத்தில் ஒன்றரை ஏக்கரில் முதன்முறையாக ராகி பயிர் சாகுபடிக்காக மாணவ, மாணவிகளே நாற்று நடவு செய்தனர். காரைக்கால் அடுத்த செருமாவிளங்கை பகுதியில் பஜன்கோ வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் உள்ளது. இங்கு 3ம்ஆண்டு படிக்கும் இளங்கலை மாணவ, மாணவிகள், உழவியல் துறை சார்பில் கல்லூரி வளாகத்தில் ஒன்றை ஏக்கர் நிலப்பரப்பில் முதன்முறையாக ராகி பயிர் சாகுபடியை தொடங்கியுள்ளனர். 102 நாள் பயிரான ராகி கடந்த சில நாட்களுக்கு முன் விதைக்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக ராகி நாற்று நடும் பணி நேற்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் செல்லமுத்து அறிவுறுத்தலின்படி, உழவியல்துறை உதவிப் பேராசிரியர்கள் ஸ்ரீதேவி, கருணாகரன் வழிகாட்டுதல்படி மாணவிகள் விவசாய பணி மேற்கொண்டனர். இதுகுறித்து, உதவிப் பேராசிரியர்கள் கூறியது: வேளாண் கல்லூரி மாணவர்களின் நேரடி களப்பணி அவர்களுக்கு கூடுதல் அனுபவங்களை தரும். அதன்படி, 3ம் ஆண்டு மாணவர்கள் 5 பேரும், மாணவிகள் 31 பேரும் என மொத்தம் 36 மாணவ, மாணவிகள் ராகி சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். சாகுபடி முடியும் வரை வேறு தொழிலாளர்கள் இன்றி மாணவர்களே முழு சாகுபடியை செய்வார்கள். இதன் லாபம் முழுவதும் மாணவர்களுக்கே பகிர்ந்து அளிக்கப்படும் என்றனர்.

**ஒட்டான்குளத்திற்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பால் விவசாயிகள் உற்சாகம்**

கூடலூர்: கூடலூர் ஒட்டான்குளத்துக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் விவசாயிகள் உற்சாகமடைந்துள்ளனர். கூடலூரில் ஒட்டான்குளம் என்று அழைக்கப்படும் மைத்தலை மன்னாடிகுளம் உள்ளது. கூடலூர் மேற்குத்தொடர்சி மலைஅடிவாரத்தை ஒட்டியுள்ள சுரங்கனார் அருவியிலிருந்து வரும் மழை தண்ணீரும், முல்லைப்பெரியாற்றிலிருந்து வைரவன் வாய்க்கால் மூலம் கூட்டாறு வழியாக வரும் தண்ணீரும் ஒட்டான்குளத்தை வந்தடைகிறது. கூடலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள 400 ஏக்கர் நிலங்களில் குளத்து நீரை பயன்படுத்தி பாசனம் நடக்கிறது. கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு சுரங்கனாறு அருவியிலிருந்து ஒட்டான்குளத்துக்கு தண்ணீர் வந்தது. இப்பகுதியில் மண்சரிவு ஏற்பட்டதால் ஒட்டான்குளத்திற்கு தண்ணீர் வரத்து முற்றிலும் தடைபட்டது. இதனால் கடந்த மூன்றாண்டாக இப்பகுதி விவசாயம் கேள்விக்குறியானது. மந்தை வாய்க்கால் பகுதியில் தடுப்பணை அமைத்து அங்கிருந்து ஒட்டான்குளத்திற்கு தண்ணீர் கொண்டு

வர முடிவு செய்யப்பட்டது. இதற்காக ஆண்டிபட்டி எம்எல்ஏ தொகுதி மேம் பாட்டு நிதி ரூ.18 லட்சம் செலவில் பணிகள் நடந்தன.இந்நிலையில் சுரங்கனார் நீர்வீழ்ச்சியில் தண்ணீர் வரத்தொடங்கி உள்ளதாலும், இப்பகுதியில் தொடர்ந்து சாரல்மழை பெய்து வருவதாலும் ஒட்டான்குளத்துக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.